ஹனி விடா

கோடை காலத்துக்கேற்ற சிறந்த பானம்





ஜீவசத்துள்ள ருசியான தேன் பானம்

கோடை காலத்தில் புத்துயிரளிக்கும் மிகச் சிறந்த பானம் ருசியான ஹனி விடா தான். ஆரோக்யத்துடனிருக்க தினசரி அருந்துங்கள். கோடையின் வெப்பத்தைத் தணிப்பதில் தனிசிறந்தது.

ஒவ்வொரு அவுன்ஸ் ஹனி விடாவிலும்:—

100	சர்வதேச யூனிட் விடமின்	B. 1
250	,, ,, ,,	C

அடங்கியுள்ளது.

ஸோல் விற்பனை ஏஜண்டுகள்:

பெஸ்ட் அண்டு கம்பெனி, லிமிடெட்,

த. பெ. நெ. 63, சென்னை

BHVH-2-TM

— 7-7

வெளி வந்து விட்டது!

“இளவேனில்”

‘சோமு’வின்

இனிய புதிய கவிதைகள்

★

சென்னை சர்வ கலாசாலைத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் ராவ் சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் தமது அரிய முன்னுரையில்:

“இப்பாடல்களில் எளிய சொற்களே உள்ளன. ஆனால் எத்தனையோ ஆற்றல் வாய்ந்தன. அவற்றை இசையோடு, பொருளுணர்ச்சியோடு நாம் பாடும்போது ஊனையும் உயிரையும் உருக்கும் தன்மையதாய் இவ் ஆற்றல் சிறந்து திகழ்கின்றது.....”

என்று பாராட்டுகிறார்கள்.

விலை ரூ. 2/-

★

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை :: திருச்சி

PHYNAZOL



The Ideal

SOLID DISINFECTANT

பினைசால் - வீடுகள், ஆஸ்பத்திரிகள், காரியாலயங்கள், தொழிற்சாலைகள், சினிமா தியேட்டர்கள், சிற்றுண்டிச் சாலைகள் முதலிய இடங்களுக்கு மிகவும் இன்றியமையாதது.

கிருமிகள், பூச்சிகள், ஈக்கள், கரப்பு முதலியவற்றை அறவே ஒழிக்கவல்லது. மற்றெவ்வித கிருமி நாசன திராவகத்தைக் காட்டிலும் ஐம்பது பங்கு வீரியமும், அடக்க சக்தியும் வாய்ந்தது. சுலபமாக ஓரிடத்திலிருந்து கொண்டுபோக மிகவும் சுலபமானது. தண்ணீரில் எளிதாகக் கரைவதுடன் இனிய மணமும் உள்ளது.

½ பவு. ரூ. 1-12-0. 1 பவு. 3-4-0
5 பவு. ரூ. 15-8-0. 10 பவு. 30-8-0
50 பவு. பவுண்டு ரூ. 3 வீதம்
உலோக டின்களில் கிடைக்கும்.

பினைசால் பெங்களூர் பப்ளிக் ஹெல்த் இன்ஸ்டிட்யூட் பெக்டீரியோலோஜிகல் டிபார்ட்மெண்டாரால் பரிசோதிக்கப்பட்டு பூரண திருப்திக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

R. W. Co. திறமை 5 இலிருந்து 6 வீதமும் நிரந்தர எமல்ஷனும் கூடியது.

பூரா விவரங்களுக்கு:

The INDIA WATERPROOFING & DYEING WORKS
40/3, DHARAMTALA STREET, CALCUTTA
PHONE CAL. 448 GRAM TEXOLQUINO

டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: மைசூர், பங்களூரு

மெஸர்ஸ். ரகுராம் & கோ., மைசூர்

மலபார், கொச்சி, திருவாங்கூர், கோயமுத்தூர் வைநாடு, நீலகிரி ஜில்லாக்களுக்கு

மெஸர்ஸ். டி. ஸ்டேன்ஸ் & கோ., லிமிடெட், கோயமுத்தூர்

கல்கி
பொருளடக்கம்

மலர் 5
இதழ் 48

1946 ஜுலை 7

வியய
ஆனி 23


என்ன சேதி?	...	...	...	5
துணைப் பஞ்சாம்	...	உம்மன்	...	6
கனம் கல்வி மந்திரி அவர்களுக்கு	...	...	...	9
அநியாய விபத்து	...	சாவி	...	13
அரசியல் அரங்கம்	...	"பூரண சுதந்திரம்"	...	14
வான சஞ்சாரம்	...	இசைத்தேனீ	...	16
சத்தியபுரி		கந்தா	...	18
ஆடல்பாடல்	...	...	...	21
நல்ல சகுனம்	...	எம். வி. பாலசுப்ரமணியம்	...	22
படித்துப் பார்!	...	...	...	29
கம்பர் தரும் காட்சி	...	டி. கே. சி.	...	30
காலக்ஷேபம்	...	...	...	32
என் அத்தான்	...	ரா. வெங்கடேசுவரன்	...	34
வட்டமேஜை	...	...	...	39
யோசனை பலித்தது!	...	பகீரதன்	...	40
பாப்பா மலர்	...	என்னென்	...	43
ரேஷனும் அநீதியும்	...	எஸ். வி. எஸ்.	...	44

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

அமெரிக்கா சுதந்திரம் அடைந்த பிறகு எத்தனையோ ஜனாதிபதிகள் அந்த நாட்டை ஆண்டு வந்திருக்கிறார்கள். ஜார்ஜ் வாஷிங்டன், ஆப்ரஹாம் லிங்கன் போன்ற சரித்திரப் புகழ் பெற்ற பிரமுகர்கள் அமெரிக்க ஜனாதிபதிப் பீடத்தை அலங்கரித்திருக்கிறார்கள்.

ஆனால் நானது 1946-ம் வருஷத்திலே மேற்படி அமெரிக்க ஜனாதிபதிப் பீடத்தை அலங்கரிக்கும் ஹாரி ட்ரூமன் அவர்களைப் போன்ற அதிர்ஷ்டக்காரர் அவருக்கு முன்னிருந்தவர்களில் யாரும் இல்லை.

தேர்தல் தொந்தரவு இல்லாமல், வோட்டுச் சேகரிப்பும் அதிலுள்ள கஷ்ட நஷ்டங்களும் இல்லாமல், பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் திடீரென்று மரணமடைந்த காரணத்தினால் ட்ரூமன் மேற்படி பெரும் பதவிக்கு வந்தார்.



அவருடைய அதிர்ஷ்டம் அத்துடன் போகவில்லை. அவருடைய காலத்திலே அணுகுண்டு என்னும் மகா பயங்கர ஆயுதத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்தார்கள். அந்த ஆயுதம் ஜப்பானைத் தோற்கடித்து இரண்டாவது உலக மகா யுத்தத்தையும் முடிவு செய்தது. எனவே, உலக சரித்திரத்தில் ஜனாதிபதி ட்ரூமனுக்கு ஒரு முக்கியமான ஸ்தானத்தை அணுகுண்டு அளித்து விட்டது.

அப்பேர்ப்பட்ட சரித்திரப் பிரசித்தியைத் தமக்கு அளித்த அணுகுண்டினிடம் ஜனாதிபதி ட்ரூமன் மிக்க நன்றி பாராட்டுகிறார் என்பதைச் சென்ற வாரத்தில் உலகத்தின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்திருந்த அணுகுண்டு பரிசோதனை விவரங்களின் மூலமாக அறிந்து கொண்டோம்.

அதிர்ஷ்டக்கார ஜனாதிபதி ட்ரூமன் ஆட்சியானது சென்ற வாரத்தில் நடந்த இன்னும் சில காரியங்களினாலும் பிரசித்தி அடைந்திருக்கிறது.

பிலிப்பைன் தீவுகளுக்குப் பூரண சுதந்திரம் அளிக்கப் போவதாக அமெரிக்கர் வெகு காலமாகச் சொல்லி வந்தார்கள். அந்த வாக்குறுதி சென்ற வாரத்தில் நிறைவேறியது. நானது ஜுலை மீ 4உ பிலிப்பைன் தீவின் மக்கள் பூரண சுதந்திரம் அடைந்து விட்டார்கள்.

அமெரிக்காவில் வருஷத்துக்கு 100 பேர் வீதம் இந்தியர்கள் குடியேறிப் பிரஜா உரிமை பெறலாம் என்னும் சட்டத்தில் சென்ற வாரத்திலேதான் ட்ரூமன் கைநாட்டுச் செய்தார்.

இப்படிப் பிரசித்திக்கு மேலே பிரசித்தியாக அடைந்து வரும் ஜனாதிபதி ட்ரூமன் இந்த வாரத்தில் நமது அட்டையை அலங்கரிக்கும் பிரசித்தியையும் அடைந்திருக்கிறார் என்றால், அவருடைய அதிர்ஷ்டத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமா, என்ன?

கல்கி

மலர் 5 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 48

என்ன சேதி?

வாழ்க மகாத்மா!

சென்ற ஞாயிற்றுக்கிழமை யன்று இந்தியாவுக்கும் உலகத்துக்கும் ஒரு பெரிய சோதனை நாளாகும். அன்றைய தினம் காந்திஜி பம்பாயிலிருந்து பூனாவுக்குப் போய்க் கொண்டிருந்தபோது, அவர் சென்ற ரயிலைக் கவிழ்க்க வேண்டுமென்ற உத்தேசத்துடன் யாரோ சில புண்ணியவான்கள் தண்டவாளத்திலே பெரிய பாறாங்கற்களைக் கொண்டுபோய் வைத்திருந்தார்களாம். நல்ல வேளையாக இன்ஜின் டிரைவர் சரியான சமயத்திலே அதைப் பார்த்து வண்டியை நிறுத்தி காந்திஜியின் உயிரைக் காத்தார்.

அஹிம்சாமூர்த்தியும் அன்பே உருக்கொண்டவருமான காந்திமகானை விரோதியாகக் கருதி அவருடைய உயிருக்கும் ஆபத்து விளைவிப்பதற்குச் சிலர் இருக்கிறார்கள், — அதுவும் இந்தப் புண்ணிய பூமியிலே இருக்கிறார்கள், — என்பது வேதனை தரும் விஷயந்தான். ஆயினும் இராமர் இருந்த காலத்தில் இராவணனும், கிருஷ்ணன் இருந்த காலத்தில் கம்ஸனும் துரியோதனனும் இருக்கத்தானே இருந்தார்கள்!

காந்திஜி இத்தகைய ஆபத்துகள் பலவற்றை ஏற்கெனவே கடந்துள்ளார். இனியும் அம்மாதிரியே எல்லா அபாயங்களையும் தாண்டி அவர் சங்கற்பம் பூண்டிருப்பதுபோல 125 வருஷம் உயிர் வாழ்வதற்கு ஆண்டவன் அருள் புரிவானாக.

கொலை செய்தனர்!

தற்போது தென்னாப்பிரிக்காவிலே நடந்துவரும் சத்தியாக்கிரக இயக்கம் முன்பு காந்திஜி அங்கே நடத்திய போராட்டத்தைக் காட்டிலும் உலகப் புகழ் பெற்றதாக ஆகிவருகிறது.

மேற்படி இயக்கத்துக்கு அத்தகைய புகழை அளிக்கும் கைங்கரியத்தைச் செய்பவர்கள் இந்தியர்கள் அல்ல. அந்த அதிசயமான தேசத்தில் வாழும் வெள்ளைக் காட்டு மிராண்டிகள்தான்.

இந்திய சத்தியாக்கிரகிகளின் கூடாரத்தைப் பறித்ததுடன் அவர்கள் நிற்கவில்லை. அதற்குத் தீ வைத்ததுடனும் நிற்கவில்லை. ஸ்திரீ சத்தியாக்கிரகியை உதைத்ததுடனும் நிற்கவில்லை.

ஒரு சத்தியாக்கிரகியைக் கொன்றே விட்டார்கள்! கொலை செய்து விட்டார்கள்!

இன்னும் கொஞ்ச நாள் போனால் அவர்கள் இந்திய சத்தியாக்கிரகிகளைக் கொன்று தின்னவே ஆரம்பித்து விட்டாலும் அதில் அதிசயம் இராது!

அத்தகைய காட்டு மிராண்டிகளை எதிர்த்துச் சாத்வீக சத்தியாக்கிரகப் போரை நடத்தி வரும் இந்திய சகோதரர்களுக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொல்லப்பட்ட வீரர் கான்ஸ்டேபின் கிருஷ்ணசாமிப் பிள்ளை உண்மையில் இறந்து போய் விடவில்லை யென்பதையும், தலைமுறை தலைமுறையாக வரப்போகும் இந்திய மக்களின் இருதயங்களில் அவர் என்றும் அழியாத சிரஞ்சீவித்வம் அடைந்து விட்டார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோதுமைக் கொள்ளை

கோதுமை மாவு கொள்ளை போகிறது! மலிவு என்றால் அசாத்திய மலிவு! ஒரு மணங்கு கோதுமை மாவு 16 ரூபாய் அடக்கம் ஆகியிருப்பதை இனிமேல் 9 ரூபாய்க்குக் கொடுக்கப் போகிறார்களாம்! இதன்படி ஒரு சாத்தல் கோதுமை மாவு இனி ஒரு அணா ஒன்பது தம்பிடிக்குக் கிடைக்குமாம்! இப்பேர்ப்பட்ட தர்மத்தை நமது கருணைமிக்க சென்னைக் காங்கிரஸ் கவர்ன்மெண்டார்தான் செய்யப் போகிறார்கள். ஒரு மணங்கு கோதுமை மாவுக்கு ஏழு ரூபாய் வீதம் நஷ்டப்படப் போகிறார்கள்! சர்க்காரிடம்

கையிருப்பிலே உள்ள பொது ஜனங்களின் பணத்தைத்தான் இப்படி விரயம் செய்யப் போகிறார்கள். எத்தனை கோடி ரூபாய் இந்தக் கோதுமைக் கொள்ளையில் நஷ்டமாகப் போகிறதோ, தெரியவில்லை.

எதற்காக நஷ்டம்?

மணங்கு ஒன்றுக்கு ஏழு ரூபாய் விதம் நஷ்டப்பட்டாவது எதற்காக அப்படிக் கோதுமை மாவை ஜனங்களின் தலையிலே, — இல்லை இல்லை, — ஜனங்களின் வயிற்றிலே திணிக்கப் பார்க்கிறார்கள் என்று கேட்டால், எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். அரிசி ஸ்டாக் குறைவாயிருக்கிறது, என்று சொல்லிப் பஞ்சாப்பிலிருந்தும் சிந்துவிலிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் ஏராளமாகக் கோதுமை இறக்குமதி செய்து வருகிறார்கள். அரிசி ரேஷனைக் குறைத்து அந்தக் குறைவுக்குக் கோதுமை வாங்கிக் கொள்ளச் சொல்கிறார்கள். பொல்லாத தென்னிந்திய ஜனங்களோ, "அரிசி குறைவாய்க் கொடுத்தாலும் கொடுத்துத் தொலையுங்கள்; பாதி வயிறு சாப்பிட்டுப் பாதிப் பட்டினி இருந்து விடுகிறோம். ஆனால் கோதுமை எங்களுக்கு வேண்டாம்" என்கிறார்கள். கோதுமையைத் தானியமாக வாங்கிச் சமைத்தால் ஜீரணமாகாமல் வயிற்று வலி உண்டாகிறது. கோதுமை மாவை ரொட்டி சுடவேண்டுமானால் அதற்கு நெய் வேண்டும்; சுட்ட ரொட்டியோடு தொட்டுக்கொள்ள உருளைக் கிழங்குக் கறி வேண்டும். இதற்கெல்லாம் ஏழை ஜனங்கள் எங்கே போவார்கள்? அரிசியாயிருந்தால் ஏதோ கூழோ, கஞ்சியோ, பழைய சோறோ சாப்பிட்டு விட்டு வேலையைப் பார்ப்பார்கள். இதனாலேதான் கோதுமைமாவு வேண்டாம் என்கிறார்கள். ஆனால் சர்க்கார் வாங்கிச் சேர்த்த கோதுமையையும், வந்து கொண்டிருக்கும் கோதுமையையும் வைத்துக் கொண்டு என்ன செய்வது? அதனால்தான் ஒன்றுக்குப் பாதி நஷ்டப்பட்டாவது கோதுமை மாவை ஜனங்களின் தலையிலே கட்டுவதற்குப் பார்க்கிறார்கள்!

இந்த மாதிரியான தொந்தரவுகளில் அகப்பட்டுக் கொண்டிருப்பதினால், உள்நாட்டுத் தானிய உற்பத்தியைப் பெருக்கும் விஷயத்தில் கவனம் செலுத்திக் காலாகாலத்தில் சரியான காரியத்தைச் செய்வதற்குச் சர்க்காரால் முடியவில்லை.

குருவையோ குருவை!


வெளியிலேயிருந்து தானியம் இறக்குமதி செய்வதிலுள்ள கஷ்டங்களையெல்லாம் காம் சாங்கோபாங்கமாக எடுத்துச் சொல்லி உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கப் பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டும் என்று பலமுறை வற்புறுத்திக் கூறியிருக்கிறோம். அப்படிச் செய்யக் கூடிய முயற்சிகளில் ஒன்று, குருவை நெல்லின் சாகுபடியை அதிகமாக்குதல். குருவைப் பயிருக்கு ஆனி மாதத்திலே விதை விதைத்து ஆடி 15உக்குள் நட வேண்டும். அப்படி நட்டால் ஐப்பசியில் அறுவடை செய்யலாம். அதாவது நவம்பர் 15உக்குள் தானியம் கைக்கு வந்து சேரும். ஆகவே, குருவை நெல்லுக்கு விசேஷ போனஸ் கொடுக்க வேண்டுமென்ற யோசனையை இரண்டு மாதத்துக்கு முன்பு தஞ்சை எம்.எல்.ஸி. ஸ்ரீ தேசிகர் வெளியிட்டார். அதை யொட்டி ஜூலை 3உ சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். குருவை நெல்லின் விலையைக் கொஞ்சம் உயர்த்தியிருப்பதுடன் மணங்குக்கு ஒரு ரூபாய் விதம் போனஸ் கொடுப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இந்த உத்தரவு இரண்டு வாரத்துக்கு முந்தி வெளியாகியிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும். விவசாயிகள் தக்க முன்னேற்பாடு செய்திருப்பார்கள். காலந்தாழ்ந்து வந்தபடியால் இந்த உத்தரவினால் எதிர்பார்த்த பலன் கிடைப்பது சந்தேகந்தான்.

பெரிய இடையூறு

தஞ்சை ஜில்லாவில் விவசாயத்துக்கு இப்போது பெரியதொரு இடையூறாயிருப்பது மிராசுதார்—பண்ணையாட்கள் தகராறு. இதைத் தீர்த்து வைப்பதற்காகச் சர்க்கார் ஒரு சமரச அதிகாரியை நியமித்தார்கள். சமரச அதிகாரி சில ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, அந்த ஏற்பாடுகளில் தகராறு நேர்ந்தால் முனிசீப் கோர்ட்டுக்குப் போகவேண்டும் என்று திட்டம் செய்திருக்கிறாராம். ஒவ்வொரு தகராறும் முனிசீப் கோர்ட்டுக்குப் போய்த் தீர்வதாயிருந்தால், விவசாயம் நடந்து உருப்பட்டாற்போலத்தான்!


இந்த மாதிரி எல்லாச் சங்கடங்களுக்கும் பரிகாரமாகத்தான் டெல்டா பிரதேசத்து நன்செய் நிலங்களை யெல்லாம் சர்க்கார் பத்து வருஷக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ராஜாஜி சொன்னார். தாற்காலிக ஏற்பாடாக, மிராசுதார்-குடிபடைத் தகராறு உள்ள இடங்களில், இந்த வருஷத்துக்குச் சர்க்கார் 'ரிஸீவர்' நியமித்துச் சொந்தப் பொறுப்பில் விவசாயம் நடத்தட்டும் என்று ராஜாஜி யோசனை சொல்லியிருக்கிறார். பற்பல அவசரச் சுற்றுப் பிரயாணத் திட்டங்களில் ஈடுபட்டிருக்கும் நமது மந்திரிகளுக்கு மேற்படி யோசனையைக் கவனித்து விவாதித்து முடிவு செய்வதற்கு அவகாசம் கிடைக்கும் என்று தோன்றவில்லை.


நாட்டிலே துணிப் பஞ்சம் இப்படியே வளர்ந்து கொண்டு
நேரிடலாம் என்று நமது



போலீஸ்காரர்கள் ஊர்த் திருடர்களைப் பிடிப்பதற்கு பதிலாக
தங்கள் உடையைத் திருடியவர்களைத் தேடிக்கொண்டு ஓடுவார்கள்.

வந்தால், சீக்கிரத்தில் சில அதிசயமான காட்சிகளைப் பார்க்க 'கார்ட்டூனிஸ்ட்' உம்மன் ஊகிக்கிறார்.





கனம் கல்வி மந்திரி அவர்களுக்கு

நமது புதிய காங்கிரஸ் மந்திரிகளுக்குள்ளே மிகவும் சுறுசுறுப்புடனே காரியாதிகளைத் தொடங்கி நடத்தி வருகிறவர் கனம் கல்வி மந்திரி ஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார் என்பதை நாம் சொல்லி நேயர்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. விளம்பர மந்திரி ஸ்ரீ கூர்மய்யகாரு பதவிக்கு வந்ததிலிருந்து நாளது வரையில் எந்தவிதமான விளம்பரமும் செய்திருப்பதாகத் தெரியவில்லை யென்றாலும், கல்வி மந்திரியின் காரியாலயத்திலிருந்து தினம் ஒரு அறிக்கையும் மணிக்கு ஒரு உத்தரவும் வெளியாகி எல்லாரையும் திணற அடித்துக்கொண்டு வருகிறது. இந்த உத்தரவுப் பிரவாகத்திலிருந்து, கல்வி மந்திரி ரொம்பவும் சுறுசுறுப்பாக இருந்து வருகிறார் என்பது ஸ்பஷ்டமாகிறது. இது ஒருவாறு நாம் எதிர்பார்த்ததே யாகும். எதிர்பார்த்தபடி நடந்திருக்கும் வரையில் மிகவும் திருப்திகரமான விஷயம்.

ஒரு மனிதர் சுறுசுறுப்புடனே காரியங்கள் செய்கிறது என்று ஏற்படும்போது சில காரியங்களை அவசரமாகவும் செய்யவேண்டியிருக்கும். அவசரமாகச் செய்யும்போது சிற்சில காரியங்களை நன்றாக யோசித்துச் செய்ய முடியாமற் போகும். எனவே, காரியங்கள் உத்தேசித்த பலன் தாராமல், தவறாகப் போவதும் சாத்தியமே. ஆனால் வெறுமனே ஒன்றும் செய்யாமல் தூங்குவதைக் காட்டிலும் நல்ல நோக்கத்துடன் சுறுசுறுப்பாகக் காரியங்கள் செய்து அவற்றில் சில தவறாகப் போனாலும் பாதகம் இல்லை யென்று சொல்ல வேண்டும்.

காரியம் 1.

நமது கல்வி மந்திரி இதுவரையில் செய்திருக்கிற காரியங்களுக்குள்ளே நாலு காரியங்கள் முக்கியமாகக் குறிப்பிடத் தகுந்தவை.

ஹைஸ்கூல்களில் எல்லாப் பாடங்களையும் தாய் பாஷையிலேயே போதிக்க வேண்டும் என்று பழைய காங்கிரஸ் மந்திரி சபை போட்ட உத்தரவைக் கண்டிப்பாக அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

இந்தக் காரியத்தைப் பற்றி இரண்டு வகை அபிப்பிராயங்கள் இருக்க முடியாது. எந்த விஷயமும் குழந்தைகளின் மனதிலே சரியாகப் பதிய வேண்டுமானால் அதைத் தாய் பாஷையிலேயேதான் போதிக்க வேண்டும். அன்னிய பாஷையின் மூலமாகப் போதிக்கும் போது, குழந்தைகளின் இளம் மூளையானது அன்னிய பாஷையின் வார்த்தைகளிலேயே நின்று விடுகிறது. விஷயம் சரியாக மனதில் பதிவதில்லை. அதற்குப் பதிலாக, பரீட்சை எழுதும் பொருட்டுப் பாடங்களை நெட்டுருப் போடும் வழக்கம் ஏற்பட்டு விடுகிறது.

எனவே, தாய்பாஷை மூலமாகத்தான் கணிதம், விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம் முதலிய பாடங்களைக் கற்பிக்க வேண்டும் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. ஆனால் இந்த அவசியமான காரியத்துக்குத் தற்சமயம் ஓர் இடையூறு இருக்கத்தான் செய்கிறது. அதாவது கணிதம், விஞ்ஞானம் முதலிய சாஸ்திரங்களில் வரும் 'டெக்னிகல்' வார்த்தைகளுக்குத் தமிழில் பிரதி பதங்கள் இன்னவைதான் என்று இன்னும் திட்டமாக வரையறுக்கப்படவில்லை. இதன் காரணமாக ஒவ்வொரு உபாத்தியாயரும் ஒவ்வொரு பாடபுத்தக ஆசிரியரும் ஒரே பொருளைக் குறிப்பதற்கு வெவ்வேறு சொல்லை உபயோகிக்கக் கூடும். இதன் மூலமாகக் குழந்தைகளின் மனதில் குழப்பம் ஏற்படலாம்.

மேற்படி குழப்பத்தைத் தடுக்க வேண்டுமானால் தமிழ் நாட்டின் சிறந்த கல்விமான்களும் விஞ்ஞானப் புலவர்களும் மொழிப் புலவர்களும் சேர்ந்து உட்கார்ந்து வருஷக் கணக்கிலே உழைத்து விஞ்ஞானச் சொற்களைத் திட்டமாக நிர்ணயம் செய்துவிட வேண்டும். இத்தகைய ஒரு சங்கம் நிரந்தரமாக வேலை செய்து வரவேண்டும்.

இது நீண்ட காலத் திட்டமாகையால் அமுலுக்கு வர நெடுங்காலம் ஆகும். எனவே, இடைக்காலத் திட்டமாக ஒரு முறையை அனுசரிக்கலாம். அதாவது எந்த விஞ்ஞான விஷயத்தையும் தாய் பாஷையிலேயே போதிக்கும்போது அந்தந்த சாஸ்திரத்துக்குரிய கலைச் சொற்களை இங்கிலீஷிலேயும் சொல்லிக் கொடுத்து விடவேண்டும்.

இதனால் தாற்காலிக சங்கடம் தீர்வதுடன் இன்னொரு நிரந்தரமான சிறந்த உபயோகமும் இருக்கிறது.

தற்போது ஆங்கில பாஷையிலே விஞ்ஞான ஆராய்ச்சி நூல்கள் சமுத்திரம்போல் அளவின்றி இருக்கின்றன.

உலகமெங்கும் நடந்து வரும் விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவுகள் எல்லாம் இங்கிலீஷ் பாஷையில் உடனுக்குடன் வெளியாகின்றன. எனவே, உயர்தர விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட விரும்பும் மாணாக்கர்கள் ஆங்கில பாஷையிலேதான் அத்தகைய விஞ்ஞான ஆராய்ச்சி நூல்களைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கும்.

இங்கிலீஷ், பிரெஞ்சு, ஜெர்மன், ருஷியன் முதலிய ஐரோப்பிய பாஷைகளிலெல்லாம் பெரும்பாலும் விஞ்ஞானச் சொற்களை ஒரேவிதமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் ஐரோப்பாவில் ஒரு தேசத்து விஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகளை இன்னொரு தேசத்தார் தெரிந்து கொள்வது மிகவும் சுலபமாயிருக்கிறது.

மேற்படி காரணங்களை முன்னிட்டு, ஆரம்ப வகுப்புகளில் விஞ்ஞான விஷயங்களைத் தாய் பாஷையில் போதித்த போதிலும், கலைச் சொற்களை மட்டும் இங்கிலீஷிலும் சொல்லிக் கொடுப்பது அத்தியாவசியமாகும். பரீட்சைகளில் பிள்ளைகள் விடை எழுதும் போது, சில சொற்களுக்கு ஆங்கில வார்த்தைகளை உபயோகிக்கலா மென்றும் சொல்லிவிட வேண்டும்.

விஞ்ஞானத்தைப் பொறுத்த வரையில், விஷயம்தான் பிரதானமாயிருக்க வேண்டுமே யொழிய, பாஷை பிரதானமாகி விடக் கூடாது.

மேற்படி முறையை அனுசரித்தால் கணிதம், விஞ்ஞானம் முதலிய விஷயங்களைத் தாய் பாஷையில் போதிப்பதிலுள்ள பல சங்கடங்கள் தீர்ந்து விடும்.

காரியம் 2.

காலேஜுகளிலே அதிகப்படியாக 1500 மாணாக்கர்களைச் சேர்த்துக் கொள்ளக் கல்வி மந்திரி ஏற்பாடு செய்திருக்கிறார்.

செய்த வரையில் நல்லதே; ஆனால் சமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்த மாதிரிதான்.

நாட்டில் நாளுக்கு நாள் குழந்தைகள் அதிகமாகி வருகிறார்கள். அவர்களில் படிக்க விரும்புகிற குழந்தைகளும் அதிகமாகி வருகிறார்கள்.

ஹைஸ்கூல்களில் முதல் பாரத்தில் குழந்தைகளைச் சேர்ப்பது முதல் காலேஜுகளில் வாலிபர்களைச் சேர்ப்பது வரையில் நெடுகிலும் இப்போது கஷ்டமாகி யிருக்கிறது.

இன்னும் நாளுக்கு நாள் ஹைஸ்கூல்களிலும் காலேஜுகளிலும் இடம் கிடைக்காத திண்டாட்டம் அதிகமாகிக் கொண்டுதா னிருக்கும்.

காலேஜுகளின் இட நெருக்கடி காரணமாக, ''பரீட்சையில் அதிக மார்க்கு வாங்கியிருக்கும் மாணாக்கர்களைத்தான் சேர்த்துக் கொள்வோம்'' என்கிற பைத்தியக்காரக் கொள்கையைக் காலேஜு நிர்வாகிகள் கடைப்பிடித்து வருகிறார்கள்.

பரீட்சைகளில் அதிக மார்க்கு வாங்குகிறவர்கள் பிற்காலத்தில் அப்படியொன்றும் அரும் பெரும் காரியங்களைச் சாதித்து விடுவதில்லை. பரீட்சையில் அதிக மார்க்கு வாங்குவதோடு அவர்களுடைய அறிவின் சக்தி அநேகமாய்த் தீர்ந்து விடுகிறது.

காலேஜில் சேரவேண்டுமே யென்ற கவலையினால் ஹைஸ்கூலில் படிக்கும் பிள்ளைகள் பலர் தேகாப்பியாசத்தையும் விளையாட்டையும் அடியோடு கைவிட்டுப் பாடங்களை நெட்டுருச் செய்வதில் ஈடுபடுகிறார்கள்.

அப்படி நெட்டுருச் செய்தவர்களுக்கெல்லாம் அதிக மார்க்குக் கிடைத்து விடுகிறது மில்லை.

மொத்தத்தில், குழந்தைகளின் மூளை பலத்தையும் தேக பலத்தையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கும் மேற்படி மார்க்குப் போட்டி முறை ஒழிந்தே தீரவேண்டும்.

ஹைஸ்கூல் முடிந்த மாணாக்கர்களில் காலேஜில் சேர விரும்புகிறவர்களுக்கெல்லாம் காலேஜில் இடமிருக்க வேண்டும்; அல்லது அவர்கள் சேர விரும்பும் வேறு தொழிற் பயிற்சிச் சாலைகளில் இடம் இருக்க வேண்டும்.

இதெல்லாம் உடனே ஆகிற காரியமில்லை யென்று சொல்லலாம்; ஆனால் உடனே ஆகக்கூடியதாகச் செய்வதற்கு வழி ஒன்று இருக்கிறது.

காலேஜுகளில் சேர்க்கக்கூடிய மாணாக்கர்களின் தொகையை உடனே இரட்டிப்பாகச் செய்யக்கூடிய முறை ஒன்று கட்டாயம் இருக்கிறது.

காலேஜ் மாணாக்கர்களுக்குப் போதனை நேரத்தைக் குறைத்து, ஒரு பகுதி மாணாக்கர்களுக்குக் காலையிலும் இன்னொரு பகுதி மாணாக்கர்களுக்கு மாலையிலும் போதனை நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

காலேஜ் மாணாக்கன் ஒருவனுக்குக் கலாசாலையில் மூன்று மணி நேரத்துக்கு மேல் ஆசிரியரின் போதனை முற்றும் அநாவசியம்.

மூன்று மணி நேரத்துக்கு அதிகமாக எந்தக் குழந்தைக்குமே பள்ளிக்கூட போதனை வேண்டியதில்லை.

பள்ளிக்கூடம் அல்லது கலாசாலையில் மூன்று மணி நேரமும் வீட்டிலே இரண்டு மணி நேரமும் ஒரு குழந்தை படித்தால் யதேஷ்டம். அதற்கு மேல் படிப்பது குழந்தைகளின் மூளைக்கு அதிக வேலை கொடுத்துக் களைப்படையச் செய்வதாகும்.

ஆரம்பப் பாடசாலைகள், ஹைஸ்கூல்கள், காலேஜுகள் எல்லாவற்றிலும் கல்வி போதனை நேரத்தைக் காலை 8 மணி முதல் 11 மணி வரைக்கும் மத்தியானம் 2 மணி முதல் 5 மணி வரைக்கும் என்று ஏற்படுத்தி, காலையில் ஒரு கூட்டம் மாணுக்கர்களும் மாலையில் இன்னொரு கூட்டம் மாணுக்கர்களும் போதனை பெறுவது என்று திட்டம் செய்து விட்டால், பிள்ளைகளுக்கு எல்லாவிதத்திலும் நன்மை. இட நெருக்கடியும் உடனே தீரும். இப்போதுள்ள கட்டிடங்கள், பெஞ்சி நாற்காலிகள், லாபரேட்டரிகளைக் கொண்டே மாணுக்கர்களின் தொகையை இரட்டிக்கு இரட்டியாகச் செய்து விடலாம்.

ஒரு வேளை, ஆசிரியர்மார்களின் தொகையை மட்டும் மூன்றில் ஒரு பங்கு அதிகமாக்க நேரிடும்.

மேற்படி முறையை எல்லாக் கல்வி ஸ்தாபனங்களிலும் அமுலுக்குக் கொண்டு வராவிட்டாலும், காலேஜுகளில் உடனே அமுலுக்குக் கொண்டு வந்து, காலேஜில் சேர விரும்பும் வாலிபர்கள் எல்லாருக்குமே இடம் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

காரியம் 3.

தற்சமயம் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலத்துக்கு முதல் ஸ்தானமும் தாய் பாஷைக்கு இரண்டாவது ஸ்தானமும் கொடுக்கப்பட்டு வருவதை மாற்றி, தாய் பாஷைக்கு முதல் ஸ்தானமும் ஆங்கிலத்துக்கு இரண்டாவது ஸ்தானமும் கொடுக்க வேண்டுமெனக் கல்வி மந்திரி ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இதுவும் ரொம்ப நல்ல ஏற்பாடு என்பதில் சந்தேகமில்லை. தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் தமிழுக்கு இரண்டாவது ஸ்தானம் என்று கேட்பதற்கே கர்ணகடூரமாயிருக்கிறது. ஆனால், மேற்படி ஏற்பாட்டை நடைமுறையில் எப்படி அமுலுக்குக் கொண்டுவரப் போகிறார்கள் என்று தெரிய வேண்டும்.

பாடங்களின் தொகுதி வரிசையில் இப்போது (1) ஆங்கிலம் (2) கணக்கு (3) தமிழ் என்று எழுதப்படுவதை மாற்றி, இனிமேல் (1) தமிழ் (2) கணக்கு (3) ஆங்கிலம் என்று எழுதுவது நல்ல முறையாகும்.

ஆனால், தாய் பாஷையை இப்போதைவிடக் கஷ்டமாகச் செய்யும் எந்த ஏற்பாடும் செய்யக் கூடாது.

நமது தமிழ் ஆசிரியர்மார்களிடம் எத்தனையோ அரிய நற்குணங்கள் இருந்த போதிலும், மார்க்குக் கொடுக்கும் விஷயத்தில் அவ்வளவு தாராளம் போதாது என்பது பிரசித்தமானது.

பரீட்சையில் மார்க்குக் கொடுப்பதென்றால் ஏதோ தங்கள் பிராணனைக் கொடுப்பதாகவே நினைத்துக் கொள்வது தமிழ்ப் பண்டிதர்கள் பலரின் வழக்கமாயிருந்து வருகிறது. தங்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தையொட்டி அவர்களும் மார்க்குக் கொடுக்கிறார்கள்!!

இந்தக் காரணத்தினாலேயே பள்ளிக்கூடங்களில் தமிழ் படிக்கும் மாணுக்கர்களில் பலர் தமிழையே வெறுக்கத் தொடங்குகிறார்கள்.

தாய் பாஷைக்கு முக்கிய ஸ்தானம் கொடுப்பதற்காகச் செய்யும் ஏற்பாடு தாய் பாஷையின்மீது துவேஷம் வளர்வதற்குக் காரணமாகிவிடக் கூடாது!

காரியம் 4.

ஆரம்பப் பாடசாலைகளிலே இப்போது நாலாவது, ஐந்தாவது வகுப்புகளில் ஆங்கில பாஷை கற்பிக்கப்படுவதை ரத்து செய்து, ஹைஸ்கூல்களில் முதல் பாரத்திலிருந்துதான் ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும் என்று கல்வி மந்திரி உத்தரவு போட்டிருக்கிறார்.

கல்வி மந்திரியின் புது ஏற்பாடுகளுக்குள்ளே இந்த ஏற்பாட்டை மட்டும் நாம் ஆதரிக்க முடியவில்லை.

இது அவசரத்தில் செய்த காரியம் என்றும் புனராலோசனை செய்து மாற்ற வேண்டும் என்றும் கருதுகிறோம்.

"இளமையிற் கல்" என்று ஔவை மூதாட்டி கூறியது பாஷைகளைக் கற்பதற்குத்தான் முக்கியமாகப் பொருந்தும்.

"ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையாது" என்ற பழமொழியானது முக்கியமாக நாவை வளைப்பதற்குத்தான் பொருத்தமானது.

சின்னஞ்சிறு வயதில் குழந்தைகளின் நாக்கு எளிதில் வளையக்கூடியதாயிருக்கிறது. எனவே பாஷைகளின் உச்சரிப்பைக் கற்பதற்குப் பத்து வயதுக்குட்பட்ட பருவந்தான் சரியான பருவம்.

தமிழ் மொழிக்கே தனிச் சிறப்பாக விளங்கும் 'ழ'கரத்தைத் தமிழர் பலரால் சரியாக உச்சரிக்க முடிவதில்லை. தமிழ்ப் பண்டிதர்களிலே சிலர்

கூடத் 'தமிள் மொளி' என்று பிழைபட உச்சரிக்கிறார்கள்!

இதற்குக் காரணம் இளம் பிராயத்தில் அவ்விதமே கேட்டும் அவ்விதமே உச்சரித்தும் பழக்கப் பட்டதேயாகும்.

இளங்குழவிப் பிராயத்தில் 'வாளைப் பளம்' என்று சொல்லிப் பழக்கமாகி விட்டால், வயதான பிறகு 'வாழைப் பழம்' என்று சொல்லப் பழகுவது மிக மிகக் கடினமாகிவிடுகிறது.

ஆங்கிலம் அல்லது ஸம்ஸ்கிருதம் அல்லது ஹிந்தி போன்ற புதிய பாஷைகளைக் கற்பதற்கும் மேலே சொன்னது பொருந்தும்.

பத்து வயதுக்குள்ளே ஒரு புதிய பாஷையாவது கற்றுக் கொண்டால் உச்சரிப்புத் திருத்தமாய் ஏற்படும்.

சாதாரணமாக, ஒரு புதிய பாஷை கற்றுக் கொள்வதில் எல்லாக் குழந்தைகளுக்குமே உற்சாகம் இருப்பதைப் பிரத்யட்ச அநுபவத்தில் காணலாம்.

வயதாக ஆக மேற்படி உற்சாகம் குறைந்து போவதையும் காணலாம்.

எட்டு வயதில் நாலாவது வகுப்பில் படிக்கும் ஒரு பிள்ளைக்கு ஆங்கில பாஷையைக் கற்பதில் உள்ள உற்சாகம் பதினொரு வயதில் முதல் பாரத்தில் படிக்கும்போது இராது.

பாஷை உச்சரிப்பும் அவ்வளவு சுலபமாய் வராது. தப்பாக உச்சரித்து உபாத்தியாயர் திருத்தும்போது அவமான உணர்ச்சி குறுக்கிட்டுக் கண்ணிலே கண்ணீர் வரும்.

தமிழில் இல்லாத சில உச்சரிப்புக்கள் ஆங்கிலத்தில் உண்டு. Man, Fox, Big, Pig, That, But முதலிய வார்த்தைகளை ஒரே குடும்பத்தில் பிறந்த எட்டு வயதுக் குழந்தைக்கும் பதினொரு வயதுக் குழந்தைக்கும் புதிதாகச் சொல்லிக் கொடுத்து எந்தக் குழந்தைக்குச் சுலபமாக வருகிறதென்று பார்க்கும்படி கோருகிறோம்.

எந்தக் கல்வி நிபுணர் என்ன சொல்லியிருந்தாலும், சிறு வயதுக் குழந்தைக்குத்தான் புதிய பாஷை சுலபமாய்ச் சொல்லிக் கொடுக்கலாம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

கல்வி மந்திரியின் மேற்படி நாலாவது ஏற்பாட்டில் இன்னொரு பெரிய அபாயமும் இருக்கிறது.

பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளும் படித்த வகுப்பினர் வீட்டுப் பிள்ளைகளும் பத்து வயதுக்குள்ளே வீட்டில் நிச்சயமாக ஆங்கிலம் கற்றுக் கொள்வார்கள். முதல் பாரத்துக்கு வரும்போது அவர்களுக்கு ஆங்கில பாஷை ஓரளவு தெரிந்திருக்கும். அவர்கள் ஆங்கில வார்த்தைகளைச் சரியாக உச்சரிப்பார்கள்.

மற்றப் பிள்ளைகள்,—ஏழை வீட்டுப் பிள்ளைகளும் கிராமாந்தரங்களிலிருந்து வந்த பிள்ளைகளும்,—தங்களுக்கு ஆங்கில வார்த்தை உச்சரிப்பு சரியாக வராதது குறித்து வெட்கப்பட்டு மனங்குன்றி நிற்பார்கள். வளரும் குழந்தைகளுக்கு,—முன்னுக்கு வரவேண்டிய குழந்தைகளுக்கு,—இது நல்லதல்ல; மிகவும் தீமை பயப்பது.

பிள்ளைகளுக்கு வயதாக ஆக, மேற் சொன்ன அவமான உணர்ச்சி அதிகமாகும்: அதனால் பயம் உண்டாகும்; சாதாரணமாய் வரக்கூடிய அளவுகூடப் புது பாஷை வராமல் போய்விடும்.

இதையெல்லாம் உத்தேசித்துக் கல்வி மந்திரி மேற்படி உத்தரவைப் பற்றிப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். கல்வி போதனை விஷயத்தில் கவனம் செலுத்தியவர்களைக் கொண்டு நன்றாகத் தீர்க்காலோசனை செய்து, உபாத்தியாயர்கள், பெற்றோர்கள் ஆகியவர்களின் அபிப்பிராயத்தையும் நன்கு தெரிந்து கொண்டு முடிவாகத் தீர்மானிக்க வேண்டுமென்று கோருகிறோம்.

இது விஷயத்தில் குழந்தைகளின் அபிப்பிராயத்தையோகூடக் கேட்டு விடலாமென்று யோசனை சொல்கிறோம்.

ஆரம்பப் பாடசாலைகளுக்குக் கல்வி மந்திரி திடீரென்று விஜயம் செய்து, மூன்றாவது நாலாவது வகுப்புக் குழந்தைகளிடம் "இங்கிலீஷ் கற்றுக் கொள்கிறீர்களா? வேண்டாமா?" என்று கேட்டுப் பார்க்கட்டும்.

ஆங்கில பாஷையையே தொலைத்து ஒரே யடியாகத் தலை முழுகுவதாயிருந்தால் ரொம்ப சரி; ஆனால் அந்தக் கோண எழுத்துப் பாஷை வேண்டும் என்று இருக்கும் வரையில், குழந்தைகளின் எட்டாவது ஒன்பதாவது பிராயத்திலேயே கற்பிக்க ஆரம்பித்து விடுவதுதான் முறையாகும்.

* * *

கல்வி மந்திரி செய்திருக்கும் முக்கிய காரியங்களைப்பற்றி மேலே எழுதினோம். செய்த காரியங்களைக் காட்டிலும் செய்ய வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றைக் குறித்து இன்னொரு சமயம் கவனிக்கலாம்.

அதிசய விபத்து

சாவி

பாறுங்கல்போல் வந்தது பனிபோல் மறைந்தது

1. முன் நிகழ்ச்சி

இடம் :—டில்லி நகரம்.

நேரம் :— பூரண சுதந்திர சூரியன் உதயமாகும் நேரம்.

லண்டன் மா நகரிலிருந்து வந்த மூன்று மந்திரிகள் தயாரித்த சுதந்திரத் திட்டம் மணிக்கு 40 மைல் வேகத்தில் பரிசீலனை செய்யப்படுகிறது. ஆச்சு; பூர்ண சுதந்திரத்தை அடையும் தறுவாயில் டில்லிப் பேச்சு வார்த்தைகளைத் தலைவர் ஆஸாத் 'பிரேக்' போட்டு நிறுத்தி விடுகிறார். உடனே தேச பக்தர்கள் அனைவரும் பூரண சுதந்திரம் தடைப்பட்டதற்கு என்ன காரணம் என்று ஆவலுடன் பார்க்கிறார்கள். மூன்றே மூன்று காரணங்கள் தான் என்று ஸ்பஷ்டமாகத் தெரிய வருகிறது.

1. ஒரு முட்டுக்கட்டை.
2. இன்னொரு முட்டுக்கட்டை.
3. மற்றொரு முட்டுக்கட்டை.

அவையாவன:

(1) இடைக்கால சர்க்காரில் ஸ்ரீ சரத் சந்திர போஸை விட்டு ஸ்ரீ ஹரிகிருஷ்ண மஹதாபின் பெயரை வைஸ்ராய் தாமே பிரஸ்தாபித்தது.

(2) பார்ஸி வகுப்புப் பிரதிநிதியாக சர்க்கார் உத்தியோகம் வகித்த ஸர். என். பி. என்ஜினீயரின் நியமனம்.

(3) காங்கிரஸ் ஸ்தானங்களில் தேசிய முஸ்லிம் ஒருவருடைய பெயரை நியமிக்க ஜனாப் ஜின்னாவின் ஆட்சேபம்.

மேற்கண்ட மூன்று முட்டுக் கட்டைகளினால் அடியோடு கவிழ்ந்து போவதற்கிருந்த 'சுதந்திர ஸ்பெஷல்' நல்லவேளையாக நமது அரும் பெரும் காங்கிரஸ் தலைவர்களின் தீர்க்க திருஷ்டியினாலும் சாமர்த்தியத்தினாலும் காப்பாற்றப்படுகிறது. நீண்டகால சுதந்திரத் திட்டம் தப்பிப் பிழைக்கிறது. "அப்பாடா" என்று தேச பக்தர்கள் பெருமூச்சு விடுகிறார்கள். பூரண சுதந்திரம் தாமதித்தாலும் கிடைத்தே தீரும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டாகிறது. வாழ்க இந்திய சுதந்திரம்! வாழ்க காங்கிரஸ் தலைவர்கள்! வீழ்க முட்டுக்கட்டைகள்!

2. பின் நிகழ்ச்சி

இடம் :—பம்பாய்—பூனா மார்க்கம்.

நேரம் :—விடியற்காலம்.

மகாத்மாவை ஏற்றிச் செல்லும் ஸ்பெஷல் ரயில் பம்பாய்—பூனா மார்க்கத்தில் மணிக்கு 40 மைல் வேகத்தில் போய்க் கொண்டிருக்கிறது. ஆச்சு; பூனாவை அடைய இன்னும் 60 மைலே பாக்கியிருக்கிறது. திடீரென்று என்ஜின் டிரைவர் ரயிலை 'பிரேக்' போட்டு நிறுத்துகிறார். திடீர் மோதலால் ரயிலிலிருந்தவர்கள் பலமாக உலுக்கப்படுகின்றனர். உடனே ரயிலில் இருந்தவர்கள், கார்டு சகலரும் வண்டியை விட்டுக் கீழே இறங்கி ரயில் நின்று போனதற்குக் காரணம் என்னவென்று பரபரப்புடன் பார்க்கிறார்கள்.

1. ஒரு பாறுங்கல்.
2. இன்னொரு பாறுங்கல்.
3. மற்றொரு பாறுங்கல்.

என்னும் மூன்றே மூன்று காரணங்கள் கண்ணெதிரே காணப்படுகின்றன.

ஒரு தடையுமின்றித் தண்டவாளத்தில் ஓடிக்கொண்டிருந்த ரயிலைச் சில சதிகாரர்கள் தண்டவாளத்தின் மீது மூன்று பாறுங்கற்களை வைத்து முட்டுக் கட்டை போட்டுக் கவிழ்க்கச் சதி செய்திருக்கிறார்கள். ஆனால் வண்டியை சர்வ ஜாக்கிரதையாக ஓட்டிச் சென்ற என்ஜின் டிரைவரின் தூரதிருஷ்டியினாலும் சாமர்த்தியத்தினாலும் பெரும் விபத்துக்குள்ளாக இருந்த 'ஸ்பெஷல்' தப்பி, இந்திய தேசத்துக்கு இன்றியமையாத உத்தமத் தலைவர் காந்தி மகானுடைய உயிர் காப்பாற்றப் படுகிறது. "அப்பாடா!" என்று ரயில் என்ஜின் பெருமூச்சு விடுகிறது. அதைப் போலவே தேசமக்கள் அனைவரும் பெரு மூச்சு விட்டுக் கடவுளை வாழ்த்துகிறார்கள். இதனால் ரயில் பிரயாணம் தாற்காலிகமாகச் சில மணி நேரம் தடைப் பட்டு நின்று, பிறகு 'ஸ்பெஷல்' சௌக்கியமாகப் பூனாவை அடைகிறது.

நல்ல காலம்! பாறுங்கல் போல் வந்த விபத்து பனிபோல் மறைகிறது வாழ்க மகாத்மா காந்தி! வாழ்க என்ஜின் டிரைவர்கள்! வீழ்க பாறுங் கற்கள்!

அரசியல் அரங்கம்

"பூரண சுதந்திரம்" எழுதுவது

அவர்களுக்கே ஆச்சரியம்!

பம்பாயில் வெளியாகும் 'போரம்' என்னும் வாரப் பத்திரிகை நெருப்பைக் கக்கும் தீவிர தேசியப் பத்திரிகை இனத்தைச் சேர்ந்தது. ராஜாஜியை மிதவாதத் தலைவர் என்று பலமாகத் தாக்கி வந்ததுடன், அவரைக் காங்கிரஸி லிருந்தே விரட்டி விடலாமென்று பெருமுயற்சி செய்த சென்னைச் சுயநல வேஷதாரிக் கும்பலை முழுக்க முழுக்க 'போரம்' ஆதரித்து வந்தது. மேற்படி பத்திரிகையின் ஜூன் மீ 30உ இதழில் "Ministry Must Act" என்ற தலைப்பில் பின்வரும் குறிப்பு காணப்படுகிறது :—

"பண்டித ஜவாஹர்லால் கைது செய்யப்பட்ட காரணமாகச் சென்னையில் ஸ்ரீ வடிவேலு செட்டியார் முதலிய ஐந்து காங்கிரஸ்காரர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். அதற்காக மேற்படி ஐந்து பேரும் சென்னைப் போலீஸாரால் கைது செய்யப்பட்டுப் பல்வேறு சிறைத் தண்டனைக்கு உள்ளானார்கள்.

அவர்களில் ஸ்ரீ வடிவேலு செட்டியார் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதியிருக்கிறார் :—

'எங்களைக் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போனவுடன் அங்கிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் இரண்டு கான்ஸ்டபிள்களைக் கூப்பிட்டு எங்களிடமிருந்த தேசியக் கொடியைக் கைப்பற்றும்படி உத்தரவிட்டார். தேசியக் கொடியை நாங்களாகவே அவர்களிடம் ஒப்புவிப்பது அவமானம் என்று கருதி அப்படித் தருவதற்கு மறுத்து, 'நாங்கள் செத்த பிறகு வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள்' என்றேன். இப்படிச் சொன்னதற்காக என்னையும், தாமோதரத்தையும் அந்த இரு கான்ஸ்டபிள்களும் சேர்ந்து கொண்டு தடியால் அடித்தார்கள். கொடியைக் கட்டியிருந்த கழியையும் உடைத்தார்கள். பின்னர் அந்தக் கொடியை இன்ஸ்பெக்டர் காலால் மிதித்துத் துவைத்தார். இதை நாங்கள் ஆட்சேபித்தபோது எங்களை வாய்க்கு வந்தபடி ஆபாச மொழியினால் ஏசினார்கள். அத்துடன் 'காங்கிரஸ் மந்திரிகள் ஜோப்பப் புரட்டப் போக்கிரிகளாக்கும்!' என்று கேலியாகப் பேசினார்கள்.'

இவ்வளவும் காங்கிரஸ் பிரதம மந்திரி ஸெக்ரடேரியட்டில் தலைமை வகிக்கும்போது நடந்த சம்பவங்களாகும்!

மேற்கண்ட ஐவரையும் கைது செய்து மேற்கண்டவாறு போலீஸார் துன்புறுத்திய சில மணி நேரத்துக்கெல்லாம் 'போரம்' பத்திரிகை இது விஷயம் பற்றி மிக மேலான அதிகாரஸ்தானத்தை விசாரித்தது. விஷயம் உடனே கவனிக்கப்படும் என்று பதில் கிடைத்தது. ஆனால் இதுவரை ஒருவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

சென்னையில், முன்கூட்டியே போலீஸ் கமிஷனரின் உத்தரவு பெறாத ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் தடை செய்யப்படுகின்றன. காங்கிரஸ் மந்திரி சபை அதிகாரத்துக்கு வந்து இரண்டு மாத காலமாகியும் இவ்மாதிரியான தடைகள் இன்னும் அமுலில் இருப்பதும் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் மீதுள்ள தடை உத்தரவும் இன்னும் நீக்கப்படாமலேயே இருப்பதும் ஆச்சரியமாயிருக்கிறது! காங்கிரஸ் மந்திரிகளிடம் இவைகளைக் கேட்டதற்கு, அவர்களும் ஆச்சரியப்பட்டதோடு மன்னிப்புக் கேட்கும் தோரணையில் பதில் சொன்னார்கள்."

இன்னமும் நடக்கும்!

"போரம்" பத்திரிகை ஆச்சரியப்படுகிறது! மந்திரிகள் சிலரும் ஆச்சரியப்படுகிறார்கள்! பொது ஜனங்களில் எவ்வளவு பேர் ஆச்சரியப்படுவார்களோ என்னமோ தெரியாது. ஆனால் நிலைமையை நன்கு அறிந்தவர்களுக்கு இந்த விஷயத்தில் எந்த விதமான ஆச்சரியமும் ஏற்பட நியாயம் இல்லை. இப்படியும் நடக்கும், இன்னும் மோசமாகவும் நடக்கத்தான் நடக்கும். "Ministry must act" என்று யார் என்ன தான் கரடியாய்க் கத்தினாலும், செய்ய முடிந்ததைத்தானே செய்வார்கள்? யாரால் என்ன காரியம் முடியுமோ, அதுதானே நடக்கும்!

இன்னொரு விஷயமும் சந்தேகத்துக்கிடமின்றி நிச்சயமாய்ச் சொல்லலாம். ராஜாஜி பிரதம மந்திரியாயிருந்தால் இந்த மாதிரியான ஒரு சம்பவம்—தேசியக் கொடியைப் போலீஸ்காரர் காலால் மிதித்துத் துவைத்த சம்பவம் — ஒரு நாளும் நடந்திராது. அப்படி ஒருவேளை நடந்திருந்தால் அந்த உத்தியோகஸ்தருக்கு மூன்று மணி நேரத்தில் சீட்டுக் கொடுக்கப் பட்டிருக்கும். பம்பாய்ப் 'போரம்' பத்திரிகைக்கு இது சம்பந்தமாகச் சிரமமே ஏற்பட்டிராது.

சிலகாலம் சென்னை நகரின் குட்டி ஹிட்லராக விளங்கிய போலீஸ் கமிஷனர் கன்னிங்காம் துரையை மூன்றே முக்கால் நாழிகை நேரத்தில் ராஜாஜி சீமைக்குக் கப்பலேற்றி அனுப்பியதை இங்கு நினைவூட்டி வைப்பது பொருத்தமல்லவா?

இரட்டிப்பு அதிகம்

சென்னை நகரசபையின் கீழ் வேலை செய்து வரும் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதாவது ஒரு மாதத்துக்குள்ளே தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் வேலை நிறுத்தம் செய்வோம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

இது சென்னை நகருக்கு ஒரு நெருக்கடியான நிலைமைதான்; நகரசபை அங்கத்தினருக்கோ வெகு வெகு நாஸுக்கான நிலைமையுங்கூட! பக்கிங்காம் — கர்னாடிக் ஆலைத் தொழிலாளருக்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கச் சமீபத்தில் சென்னை நகர சபையார் தீர்மானித்தனர். அப்படியிருக்க, நகரசபைத் தொழிலாளர்களே வேலை நிறுத்தம் செய்தால் அதற்கு நன்கொடையளிக்க மறுப்பது தர்மமாகுமா? அப்படி நகர சபைப் பணத்திலிருந்து நன்கொடை அளிப்பதைக் காட்டிலும் தொழிலாளரின் கோரிக்கைகளை அநுதாபத்துடன் கவனித்து ஒரு சமரச ஏற்பாடு செய்வது நல்லதல்லவா?

இது ஒருபுறமிருக்க: நகர சபைத் தொழிலாளரின் கோரிக்கைகளைப் பற்றி அவர்களுக்கு நகர சபைக் கமிஷனர் ஸ்ரீ ஷெனாய் புத்திமதி கூறியபோது, 'பம்பாய் நகரசபைத் தொழிலாளரின் சம்பள விகிதத்தைப் பார்த்து அதுபோல் சென்னை நகரசபைத் தொழிலாளர் கேட்கக் கூடாது' என்று சொன்னார். ஏனென்றால், பம்பாயில் வாழ்க்கைச் செலவு சென்னையில் வாழ்க்கைச் செலவைப்போல் இரட்டிப்பு அதிகம் என்று கூறினார்.

இருக்கலாம் ஐயா, இருக்கலாம். வாழ்க்கைச் செலவு விஷயத்தில் பம்பாய் சென்னையைக் காட்டிலும் இரட்டிப்பு உயர்வாயிருக்கலாம். ஆனால் மந்திரிகளின் சம்பளத்தைப் பொறுத்தவரையில் பம்பாயைக் காட்டிலும் சென்னை இரட்டிப்பு உயர்ந்த ஸ்தானம் வகிக்கிறதென்பதை நாம் மறந்துவிட முடியாது!

பம்பாய் மாகாணத்தில் பத்து காங்கிரஸ் மந்திரிகள், பத்து பார்லிமெண்டரி காரியதரிசிகள், ஒரு சட்டசபைத் தலைவர், ஒரு சட்டசபை உப தலைவர் இவர்கள் எல்லாருக்கும் சேர்த்துச் சம்பளமும் அலவன்ஸும் மொத்தம் மாதம் ஒன்றுக்கு ரூ 17 750. சென்னை மாகாணத்திலோ பதின்மூன்று காங்கிரஸ் மந்திரிகள், பதினாறு பார்லிமெண்டரி காரியதரிசிகள், ஒரு சட்டசபைத் தலைவர், ஒரு சட்டசபை உபதலைவர் ஆகியவர்களுக்கு மொத்தம் மாதச் சம்பளமும் அலவன்ஸும் சேர்த்து மாதம் ரூ. 32 630. அதாவது பம்பாயைக் காட்டிலும் சென்னை மாகாணம் மந்திரி வகையரா உத்தியோகங்களுக்காக ஏறக்குறைய இரட்டிப்புச் செலவு செய்கிறது! இதிலிருந்து பம்பாயைக் காட்டிலும் சென்னை ஏறக்குறைய இரட்டிப்பு உயர்வானது என்று ஸ்பஷ்டமாக ஏற்படவில்லையா?

அப்படியிருக்க, சென்னை நகர சபைத் தொழிலாளிகள் பம்பாய்த் தொழிலாளிகளைப் போல் தங்களுக்கும் சம்பளம் வேண்டுமென்று கேட்பது பிசகாகுமா?

ஆலோசனை யாருக்கு?

ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஆசிரியர் வி. ரங்காவும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ காமராஜ நாடாரும் கலந்து யோசித்து, சென்னைக் காங்கிரஸ் மந்திரி சபைக்கு அவ்வப்போது தகுந்த யோசனைகளைச் சொல்வதற்காக ஆலோசனை போர்டு ஏற்படுத்த உத்தேசித்திருப்பதாய்ப் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. ஆலோசனை போர்டு நியமிக்கலாம்; ஆலோசனையும் சொல்லலாம். ஆனால் மகாத்மா காந்தி, மௌலானா ஆஸாத், சர்தார் படேல் ஆகிய மூப்பெரும் தலைவர்களுடைய யோசனையையே புறக்கணித்துப் பிரதம மந்திரி பதவிக்கு வந்த ஸ்ரீ டி. பிரகாசம் இந்த மாகாண ஆலோசனையாளர்களின் ஆலோசனையைச் செவி கொடுத்துக் கேட்பாரா என்பதுதான் சந்தேகமான விஷயம்.

அடுத்த "கல்கி" இதழில்

★ யசோதரா ★

என்னும் தொடர் கதை ஆரம்பமாகிறது

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

கேட்கக் கேட்கத் திகட்டாத பாவத்துடன் வீணையைக் கையாளுபவர் காரைக்குடி சாம்பசிவய்யர். ராகமோ, கிருதியோ, எதையும் களங்கமற்ற தெளிவுடன், கமகம் பொழிய, அழுத்தமாய் வாசிப்பதில் நிகரற்றவர். திருச்சியில் 24உ. ஷண்முகப்ரியா, அசாவேரி, கரஹரப்ரியா இவைகளோடு, பாவனி என்ற அபூர்வ 41-வது மேள ராகத்தையும், இக்காலத்தில் சாதாரணமாய்க் கேட்கப்படாத 'சக்கனிராஜ' கிருதியையும் அவர் வழங்கினார். இறுதியில் கேட்ட கமாஸ் எல்லாவற்றையும் தூக்கியடித்தது.

18உ. சென்னையில் திருப்பாம்பரம் சுவாமிநாதப் பிள்ளை வேணுவில் ராகம் தானம் பல்லவி வாசித்தார். சங்கராபரணம் பல்லவியில் கோர்த்த ஸ்வரப்ரஸ்தாரங்கள் குறிப்பிடத் தக்கவை.

20உ. திருச்சியில் மருங்காபுரி கோபால கிருஷ்ணய்யரின் வயலின் கச்சேரி தரமாயிருந்தது. பழுத்த அநுபவமும் சம்பிரதாய முறையும் கொண்டு, வஸந்தா, பேகடா, சுத்த சாவேரி இவைகளோடு, பல்லவி ராகமான சுபபந்துவராளியையும் அழுத்தமாய் இழைத்திழைத்து வாசித்தார்.

19உ. திருச்சியில் வயலின் வாசித்த திருவாலங்காடு சுந்தரேசய்யர் அவ்வாத்தியத்தில் கைதேர்ந்தவர். அவருடைய திறமைக்குத் தகுந்த பிரபல்யம்தான் இல்லை. வாசஸ்பதி, சக்ரவாக ராகங்கள் அன்று மிக வனப்பாயிருந்தன.

20உ. சென்னையில் டி. கே. லக்ஷ்மணன் நய சாரீரமும் நல்வழியும் கொண்டு பாடுவதில் சக்ரவாகமும் காம்போதியும் தரமாயிருந்தன. உருப்படிகளின் சாஹித்யத் தெளிவு போதியவாறில்லை.

21உ. சென்னையில் மதுரமான குரலில் 'அன்னைமைநிருக' கிருதியை விசேஷ சங்கதி வனப்புடன் என். ஜயலக்ஷ்மி வழங்கினார். கானடா சுகமாயிருந்த போதிலும், ஒரே சஞ்சாரங்கள் திரும்பத் திரும்ப விழுந்து கொண்டிருந்தன.

22உ. திருச்சியில் பாடிய ஏ. ஜீ. செல்வம் பிள்ளைக்கு தடித்த சாரீரம். தோடி, ஸிம்மேந்திரமத்யம ராகங்களும் 'உண்டுருவ தெய்வமான்' உருப்படியும் நன்று யிருந்தன. ஸாஹித்யத் தெளிவு விசேஷம்.

23உ. சென்னையில் என். ராஜலக்ஷ்மி, வி. வி. எஸ். கிருஷ்ணன், திருச்சியில் சாட்டியக்குடி என். மீனாக்ஷிசுந்தரம் இவர்களின் கானங்கள் குறிப்பிடத் தக்கவை.

• • •

ஜூன் 29உ. சென்னையில் கேட்ட வி. துரைசாமி அய்யங்காரின் வீணைக் கச்சேரியில் மீட்டு நளினத்துடன், ராகங்களிலும் உருப்படிகளிலும் தெளிவும் வசீகர வழியும் தென்பட்டன. சாவேரி, தோடி, காம்போதி ராகங்கள் தம் சொரூபங்களை விரைந்து வந்தன. கானடாவில் மாத்திரம் பல தடவை நிஷாதஸ்தானி சாயை தட்டியது. மொத்தத்தில் மத்தியகால வேலைப்பாடுகளிலேயே சோபை கண்டது. கமகங்களில் போதிய நிதானத்தையும் அழுத்தத்தையும் வருவித்துக் கொண்டு, நடு நடுவே விழும் அபஸ்வரப் பிரயோகங்களின் தோஷத்தையும் நீக்கிக்கொண்டால் கச்சேரி இன்னும் உயர்தரமாகும்.

சென்னையில் 25உ. வி. வி. சம்பூர்ணத்தின் கானம் ரஸிக்கக் கூடியதாயிருந்தது. நடுத்தரக் குரலில் நல் வழியுடன் ஆரபி தோடி ராகங்களை வழங்கினார்.

26உ. சென்னையில் கே. எஸ். கிருஷ்ணன், எம். ராமச்சந்திரன் இவர்களின் கச்சேரிகள் குறிப்பிடத் தக்கவை. முன்னவரது பைரவியும் 'உபசாரமு' கிருதியும் விறுவிறுப்பாயிருந்தன. பின்னவருக்குக் கிடைத்த நேரம் கால் மணியே யானாலும் அதற்குள் அவர் பாடிய காட்டி ராகத்திலும், பூர்விகல்யாணி உருப்படி நிரவல் ஸ்வரங்களிலும் மதுரை மணி ஐயரின் வழி பிரதிபலித்தது.

27உ. திருச்சியில் வாய்ந்த வி. எஸ். கிருஷ்ணய்யரின் கச்சேரி உயர்ந்த ரகவகை. நய சாரீரம்; நல்ல உதவுபடி. தோடிக்கு முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். கல்யாணியும், தேவமனோஹரியும் வனப்பாயிருந்தன. 'எவரிகை' கிருதியில் சங்கதிகள் கோவை அழகு பொருந்தி விளங்கின.

28உ. சென்னையில் வி. ராமச்சந்திரமூர்த்தி, டி. வி. சிவராமன் இவர்களின் கானங்கள் ஸமமாயிருந்தன. முன்னவர் நய சாரீரமும் ராகத் தெளிவும் கொண்டு கௌளை, ரஞ்சனி ராகங்களைச் சரளமாய் வழங்கினார். பின்னவரது இனிய குரலிலிருந்து, பூர்வி கல்யாணி ராகமும், 'இந்தப் பராமுகம்' உருப்படி நிரவல் ஸ்வரங்களும் தரமாய் வெளிவந்தன.

29உ. சென்னையில் வேலூர் சுப்ரமணிய அய்யர் நாராயணி, முகாரி ராகங்களை வசீகரமாய்க் கையாண்டார்.

• • •

ஜூலை 1உ. திருச்சியில் டி. கே. ஆர். மாரிக்கண்ணுவின் நாகஸ்வரத்திலிருந்து, குளிர்ந்த நாதத்துடன், கௌரி மனோஹரி ராகம் விஸ்தாரமாயும், அழகு கற்பனையுடனும் வெளியாகிக் காதை நிரப்பியது.

அன்று அதே நிலையத்தில் நிகழ்ந்த தஞ்சை லக்ஷ்மி நாராயணய்யரின் கச்சேரி இசை விருந்தாய் அமைந்தது. கனிப்பும் ரஞ்சகமும் கொண்ட மணிநாத சாரீரப் பெருமையுடன் அழகு பாணியும் நெருங்கும் சேர்ந்து விளங்கின. சங்கராபரணமும், பல்லவி ராகமான ஸிம்மேந்திரமத்யமமும் விஸ்தாரமாய் பாவப் பொலிவுடன் உருக்கமாயிருந்தன. ஹிந்தோளமும் செஞ்சுருட்டியும் வனப்பு வடிவங்களாய் விளங்கின. மேல் ஸ்தாயி சஞ்சார சங்கதிகளில் கனதய நாதசுகமும் இருந்தது.

சென்ற இதழின் வெளியான காலஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ம. மகாதேவன், நெ. 8, பொன்னுது ரோடு, கடலூர் என். டி.

சத்திய புரி

சுந்தரா

போர்ட்டர் சொன்னான்:

"இவ்வளவுதானுங்க சாமானுங்க; கனமே இல்லீங்களே!"

வேறு எந்த ஊர்ப் போர்ட்டராவது இப்படிச் சொல்லியிருந்தால் ஆச்சரியப்பட வேண்டியதுதான்; சத்தியபுரிப் போர்ட்டர் சொன்னதினால் ஆச்சரியப்படவில்லை.

ஸ்டேஷனுக்கு எதிரே இருந்த ஹோட்டலுக்குச் சென்றேன். "தங்கியிருக்க வசதியான அறை இருக்கிறதா? சாப்பாடு நன்றாயிருக்குமா?" என்று ஹோட்டல் முதலாளியைக் கேட்டேன். "வசதியை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். சாப்பாடு அமாசாய் இருக்கும். உங்கள் பசியையும் ருசியையும் பொறுத்தது" என்று பதில் வந்தது.

மாலையில் ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டேன். புறப்படுவதற்கு முன்னால், என் அறையைப் பூட்டிக் கொள்ள ஒரு பூட்டு வேண்டுமென்று ஹோட்டல் முதலாளியைக் கேட்டேன். பூட்டவேண்டிய அவசியமே இல்லை என்று அவர் சொன்னார்.



வெளியே வந்ததும் ஒரு ஜட்காவைக் கூப்பிட்டேன். "கடைத்தெருவுக்கு என்ன வாடகை?" என்று கேட்டேன். "காலணா" என்றான் வண்டிக்காரன். வண்டியில் உட்கார்ந்தபடியே இரு பக்கத்து வீடுகளையும் பார்த்துக் கொண்டே சென்றேன். "இந்திர விலாஸ்", "சந்திர விலாஸ்," "அருணகம்," "அன்பகம்," என்பன போன்ற வர்ணனைப் பலகை எதுவும் காணப்படவில்லை.

கடைத்தெருவுக்கு வந்ததும், வண்டியை விட்டிறங்கி, வண்டிக்காரனிடம் ஓரணா கொடுத்தேன். "பேசினது காலணாதானுங்க" என்று ஒரு அணாவைத் திரும்பக் கொடுக்க வந்தான். "சும்மா இனாமாக வைத்துக் கொள்" என்று சொல்லிவிட்டு நடந்தேன்.

ஒரு ஜவுளிக் கடைக்குள் பிரவேசித்தேன். "கறார் விலை," "கடன் கிடையாது," "கெட்டிச் சாயச் சரக்குகள்" என்று எழுதிய போர்டுகள் எதும் அங்கே காணப்படவில்லை. ஒரு பட்டு அங்க வஸ்திரத்தை எடுக்கச் சொல்லி, அதில் ஒட்டியிருந்த சீட்டைப் பார்த்தேன். "அடக்க விலை ரூ. 20; விற்பனை விலை ரொக்கத்துக்கு ரூ. 22; கடனுக்கு ரூ. 24!" என்று போட்டிருந்தது.

கடைத்தெருவைக் கடந்து, உண்மையிலேயே பெரிதாக இருந்த, "பெரிய தெரு"வில் நடந்து சென்றபோது, வாசகசாலை ஒன்றைக் கண்டேன். அதற்குள் நுழைந்து பத்திரிகைகளைப் பார்த்தேன். அவற்றின் அளவு சிறியதாய் இருந்தது; பக்கங்களோ நாலே நாலுதான். "சத்தியபுரியில் ரொம்பக் கண்டிப்பான காகிதக் கண்ட்ரோல் போலிருக்கிறது" என்று முதலில் நினைத்தேன். ஆனால், பத்திரிகைகளைப் படித்துப் பார்த்ததும், அவற்றின் மெலிவுக்குக் காகிதக் கண்ட்ரோல் ஏதும் காரணமல்ல என்பதைக் கண்டு கொண்டேன். திருடர்களின் சாடுகளோ, வட்டாரங்களின் ஊகங்களோ, விஷயமறிந்தவர்களின் வியாக்கியானங்களோ, மற்றும் ஹேஷ்யங்கள், சாட்டைகள், சவால்கள் முதலியவைகளோ பிரசுரமாகவில்லையென்றால், பத்திரிகைகள் எப்படிப் பெரியதாய் இருக்க முடியும்? பிரசுரமாகி



விருந்த செய்திகள் எல்லாம் ரத்தினச் சுருக்கமாய், ஸ்படிகத் தெளிவாய் இருந்தன.

இடை இடையே சிறு சிறு விளம்பரங்களும் வெளியாகியிருந்தன. அவை வீணாசை காட்ட வில்லை. உத்தரவாதங்கள் அளிக்க வில்லை. பணத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளலாம் என்று வாக்குறுதி கூறவில்லை. இமிடேஷன்களைக் கண்டு ஏமாறவேண்டாம் என்று எச்சரிக்கை செய்யவில்லை. போனால் வராது என்று பயமுறுத்தவில்லை. சினிமா விளம்பரங்களில், "மகோன்னதமான சிருஷ்டி." "நிகரில்லாத இன்பச் சித்திரம்" என்பன போன்ற சொற்றொடர்களைக் காணவில்லை. சோப்பு விளம்பரங்களில், பேர் பெற்றவர்களின் நற்சாட்சிப் பத்திரங்களைக் காணவில்லை. மருந்து விளம்பரங்களில் மெழுவன் குமாரனை வாலாற்றைக் காணவில்லை.

வாசகசாலையி லிருந்து வைத்தியசாலை ஒன்றுக்குள் சென்றேன். டாக்டர் நோயாளிகளிடம் கூறிய மொழிகளைக் கேட்டேன். "இந்த மருந்தை ஒரு வார காலம் சாப்பிட்டுப் பாருங்கள். குணம் கண்டாலும் காணலாம்" என்று ஒரு நோயாளியிடம் கூறினார். மற்றொரு நோயாளியிடம் "உங்கள் வியாதி இன்னதென்று எனக்குப் பிடிபடவில்லை. வேறு யாரேனும் டாக்டரிடம் காட்டுங்கள்" என்றார்.

வைத்தியசாலையை விட்டு வெளியே வந்ததும், வக்கீல்கள் தொழில் நடத்தும் முறையைக் கவனிக்க வேண்டுமென்று தோன்றிற்று. "பக்கத்தில் வக்கீல் யாரேனும் இருக்கிறாரா?" என்று வழியில் சென்று கொண்டிருந்த ஒருவரைக் கேட்டேன். "வக்கீல் என்றால் யார்?" என்று அவர் திரும்பக் கேட்டார். "அதுதான் கோர்ட்டில் கேஸ் நடத்திக் கொடுக்கிறவர்" என்று விளக்கம் செய்தேன். "கோர்ட் என்றால் என்ன?" என்று அவர் மறுபடியும் திருப்பிக் கேட்டார். அவரை விட்டு விட்டு, மற்றும் நாலைந்து பேர்களை விசாரித்தேன். அவர்களும் "வக்கீல் என்றால் யார்? கோர்ட்டு என்றால் என்ன?" என்று தான் திருப்பித் திருப்பி எதிர்க் கேள்வி கேட்டார்கள்.

சத்தியபுரியில் வக்கீல்கள் இல்லை, கோர்ட்டுகள் கிடையாது என்பதை அறிந்தேன். மேலும், ஜோதிடர்கள், மாந்திரிகர்கள், அதிர்ஷ்ட கவச வியாபாரிகள் முதலானோர் கிடையாது என்பதையும் அறிந்தேன்.

இப்பேர்ப்பட்ட சத்தியபுரியில் கோவில் தரிசனம் செய்யவேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. கோவிலுக்குச் செல்ல வழி கேட்டேன். ஒருவருக்காவது, கோவிலுக்கு வழி சொல்லத் தெரிய வில்லை. கோவில் இருந்தால்தானே வழி சொல்லத் தெரியும்!


ஆம்; சத்தியபுரியில் கோவில் இல்லை. கோவில் இல்லை என்பதை அறிந்ததும் சற்றே திகைத்தேன். ஆனால் உடனேயே திகைப்பு நீங்கித் தெளிவு கண்டேன். "சத்திய புரியில் கோவில் எதற்கு?" என்று கேட்டுக் கொண்டேன்.

* * *

"எல்லாம் சொன்னாயே, இந்தச் சத்தியபுரி எங்கே இருக்கிறது?" என்று கேட்கலாம். எங்கேயும் இல்லை; நான் சொன்னது அத்தனையும் பொய்.




மெழுவன் (வந்தவனிடம்):— என்னப்பா, சும்மா கலாட்டா பண்ணுறேயா? மரியாதையாச் சொல்றேன்: இந்த இடத்தை விட்டுப் போயிடு. ஆமாம்; நீ கிழப் பயல் என்கிறதாலே உன்னை இதோடு விட்டுடறேன்! தெரியுமா?



டன்லப்
டயருடன்
நம்பிக்கையுடன்
ஓட்டுங்கள்

TRADE MARK



DK-277-Tm

களக்காடு ராம நாராயணய்யர்

நல்ல சங்கீதத்துக்குச் சாரீர வளம் இன்றியமையாதது. ஞானபாவமும் கற்பனையும் எவ்வளவு இருப்பினும், போதிய சாத்கிரமும், சஞ்சாரமும் சேர்ந்த குரல் இல்லாவிட்டால் சங்கீதம் சோபிக்காது.

களக்காடு ராமநாராயணய்யரின் சங்கீதம் எளிதில் ரஸிக்கக்கூடியது என்றால், அதற்கு முக்கிய காரணம் அவருக்கு இயற்கையாயமைந்திருக்கும் குளிர்ந்த சாரீரமே. அத்துடன் சிறந்த ஞானமும், நல்வழி சாதகமும் சேர்ந்திருக்கின்றன. கலைக் களஞ்சியமான குடும்பத்தில் பிறந்தவர். பெரும் ஞானம் படைத்த களக்காடு சுப்பையா பாகவதரின் புதல்வர்; வயலின் வித்வான் பரூர் சுந்தரய்யரின் மாப்பிள்ளை. எனவே அவர் கலை வளர்ச்சி மேம்பட்டிருப்பதும் கலையுலகில் ஆதரவு பெற்று முன்னணிக்கு வந்திருப்பதும் ஆச்சரியமில்லை.

சென்ற 25வ ஞாயிற்றுக் கிழமை கோகலே ஹாலில் இண்டியன் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தில் நடைபெற்ற ஸ்ரீ ராமநாராயணன் கச்சேரியில் பந்துவராளியும், காம்போதியும் உருக்கமாயிருந்தன. கமாஸ், தர்பார் ராகங்கள் நயமாயிருந்தன. 'ஸாகேத நகர' 'தப்ப ராம பக்தி' 'ஸ்ரீ சுப்ரமணியாய நமஸ்தே' கிருதிகள், லயப் பிடிப்புடன் கச்சிதமாயிருந்ததோடு அவைகளில் அமைந்த சிட்டஸ்வரப்ரஸ்தாரங்கள், ராக பாவம் ததும்பி பிருவாயிருந்தன. பைரவியைப் பல்லவி ராகமாய் எடுத்துத் தானம் பாடி, 'உன் தரிசனம் கிடைக்குமோ' என்ற பல்லவியைக் கண்ட ஜாதி திருபுடையில் நிறம்பட வழங்கினார். 'கானாமுத பானம்' என்ற ஜோதிஸ்வரூபிணி கிருதி நயமாயிருந்தது.

மொத்தத்தில் ராமநாராயணய்யரின் வழி இக்காலத்தில் பெரும்பாலும் காணப்படும் பிர்க்கா, உருட்டல் புரட்டல்களாலானதல்ல. கற்பனை யிருந்தபோதிலும் பிரமிக்க வைக்கும் தன்மையதாயில்லை. சாரீர மெருகினால், சாதாரண ராக சஞ்சாரங்கள் சங்கதிகள் கூடப் பிரத்யேக வனப்படைகின்றன. ஸ்தாயி சஞ்சாரங்களை அனுயாசமாய்க் கையாளுகிறார். ஸ்வானுபூதியுடன் பாடுகிறார்.

ஆனால் எந்தப் பாடகரும் தம்முடைய ஞானப் பெருக்கையும், தேர்ச்சியையும் ஒரே கச்சேரியில் முழுதும் காட்டிவிட வேண்டுமென்று ஆத்திரப்பட்டால் சில சமயம் சலிப்புக்கு இடம் கொடுக்கும். ராமநாராயணய்யரோ, சாரீர சுகத்தில் ஈடுபட்டு, எல்லா ராகங்களையும் வெகு விஸ்தாரமாய் ஆலாபனை செய்யும் ஆற்றலுடையவர். உருப்படிகளையும் இழுத்துப் பாடும் இயல்புடையவர். அன்று 'தப்பராம பக்தி' கிருதியின் ஸ்வரப்ரஸ்தாரத்தில், அரிய 'கோவைப்பாடுக' ளுடன் தமது திறமை முழுவதையும் காட்ட வேண்டும் என்ற முயற்சியில் வெகு நேரம் இழுத்துவிட்டார். விளம்ப மத்யமகால உருப்படிகளையும் கோவைப்பாடுகளையும் சரவிக் கச்சேரி புரோகிராமைப் பங்கிடு செய்து பொருத்தமாய் அமைத்துக் கொள்வாரானால் அவர் கச்சேரியை எல்லாரும் நன்கு அனுபவிக்க முடியும். —ச. கிருஷ்ணய்யர்.

ட்ரூமன் வெற்றி ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★


அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் மீன் பிடிப்பதில் நிபுணர். ஒரு சமயம் அவர் இரண்டு நண்பர்களுடன் மீன் பிடிக்கச் சென்றார். ட்ரூமனுக்கும் மற்ற இரு நண்பர்களுக்கு மிடையே ஒரு போட்டி நடந்தது. "முதல் முதலில் யாருடைய தூண்டிலில் மீன் சிக்குகிறதோ அவர் மற்ற இருவருக்கும் விருந்து வைக்க வேண்டும்" என்பது பந்தயம்!

மேற்படி பந்தயத்தைப் பற்றி ட்ரூமன் ஒரு பிரசங்கத்தில் பிரஸ்தாபித்தார்: "என்னுடைய நண்பர்கள் இருவரும் தங்களுடைய தூண்டிலில் முதலில் மீன் சிக்கி விட்டால் எனக்கு விருந்து வைக்கவேண்டி நேருமே என்று ரொம்ப அற்பத்தனமாக நடந்து கொண்டார்கள். அதற்காகத் தங்கள் தூண்டிலில் சிக்கிய மீனை யெல்லாம் தப்பித்துக் கொள்ளும்படி உதறிக் கொண்டே யிருந்தார்கள்."

கூட்டத்தில் ஒருவர்:—எனவே, தாங்கள் தான் விருந்து நடத்தினீர்களோ?

ஜனாதிபதி:—இல்லை; இல்லை. நான் என்ன, ஏமாந்தவனா? என்னுடைய தூண்டிலில் மீனே சிக்க வில்லை. காரணம், தூண்டிலில் நான் மீனுக்கு வேண்டிய உணவே வைக்கவில்லையே!

நல்ல சகுனம்



எம். வி. பாலசுப்ரமணியம்

பிள்ளையார் கோவில் மணி கணகண வென்று ஒலித்தது. பால்காரப் பொன்னுச்சாமி கையில் பால் செம்புடன் பசுவையும் கன்றையும் விரட்டிக் கொண்டு எதிரே வந்தான்.

"ரொம்ப நல்ல சகுன மாகிறது; போய்விட்டுச் சந்தோஷமாகத் திரும்பி வாருங்கள்!" என்று பரபரப்புடனும் அன்புடனும் கணவனை வழி யனுப்பினாள் மைதிலி. அவளை நோக்கி ஒரு புன்முறுவல் செய்துவிட்டுக் கலெக்டர் பங்களாவை நோக்கி நடக்க ஆரம்பித்தான் மூர்த்தி.

வழியெல்லாம் அவனுக்கு ஒரே சிந்தனை. "கலெக்டரோ, புதியவர். அவர் இந்த ஊருக்கு வந்து இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் நாம் போய்ப் பார்க்கப் போகிறோம்... ஆபீஸ் ரிகார்டுகளி லென்னவோ நம்மைப் பற்றி நல்ல பெயர்தான். ஆனால் அது அவருக்கு எப்படித் தெரியும்? என்னைவிட ஒரு வருஷம் 'ஸர்விஸ்' அதிகம் ஆனவர்கள் இரண்டு பேர் இருக்கும்போது எனக்கு இந்த டிப்டி தாசில்தார் வேலைக்கு உயர்வு கிடைக்குமா? என்னமோ நேரில் சென்று பார்ப்போம். கடவுள் இருக்கிறார்."

கால் சென்ற வழியே நடந்து கலெக்டர் பங்களாவை அடைந்தான். பங்களாவின்

உள்ளே நுழைந்தவுடனேயே மூர்த்தியை எதிர் கொண்டழைக்க வந்தவன் போல் டவாலி பில்லையை மெருகு படுத்திக் கொண்டே "வாங்க ஸார், வாங்க; கலெக்டர் எஜமானைப் பார்க்க வந்தீங்களா? இப்படி உள்ளே வந்து கொஞ்சம் உட்கார்ந்திருங்க; ஒரு கொடியிலே மாடிக்குப் போய் எஜமான் கிட்டே சொல்லிட்டு வந்துடறேன்!" என்று சொல்லிக் கொண்டே அவன் பதிலைக்கூட எதிர் பார்க்காமல் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டு மாடியை நோக்கி 'விர்' றென்று பாய்ந்தான் டபேதார் ரங்கசாமி.

நாற்காலியைச் சற்று முன்னுக்கு இழுத்துக் கொண்டு அமர்ந்தான் மூர்த்தி. அவன் ஞாபகமெல்லாம் வேறு இடத்தில் லயித்திருந்தது. கலெக்டரைப் பார்க்கப் போகும் சமயம் நெருங்க நெருங்க எதையோ திருடியவன் போல் 'பக்டக்' கென்று அடித்துக் கொண்டது அவன் இருதயம்.

"ஸார்! எஜமான் உங்களை வரச் சொன்னாங்க!" என்றான் டபேதார்.

சிந்தனை கலைந்து இருக்கையை விட்டு எழுந்தான். தன் உடையை ஒருதரம் சரியாய் இருக்கிறதா என்று மேலும் கீழும் பார்த்துக் கொண்டான். 'டை' யை இழுத்துச் சரிப்படுத்திக் கொண்டு மாடியை நோக்கி நகர்ந்தான் மூர்த்தி.

* * *


படி வரிசையில் இரண்டு படிகள் ஏறியிருப்பான்.

"டேய், ரங்கா!" என்று மெல்லென ஒலித்தது அவனுக்குப் பின்னால் ஒரு பெண் குரல். கலெக்டர் சம்சாரம் — சகுந்தலா — ரங்கனிடம் ஏதோ சொல்வதற்காக வெளியே வந்தாள்.

பின்புறமிருந்து வந்த பெண் குரல் மூர்த்தியின் செவியிலும் கேட்டது. மாடிப் படியிலிருந்தபடியே யதேச்சையாகப் பின் பக்கம் திரும்பிற்று அவன் பார்வை. மீண்டும் "டேய், ரங்கா!" என்று அழைத்த அவளை ஒரு முறை உற்று நோக்கின அவன் கண்கள். அதே சமயம் அவள் பார்வையும் மூர்த்தியின் பக்கம் யதேச்சையாகவே சென்றது. அடுத்த கணம் அவன் உள்ளத்தில் ஓர் அதிர்ச்சி. அவன் கனவு காணவில்லை. உண்மைதான். நிலைப் படி அருகில் அவன் கண்ட உருவம் அவளேதான். கலெக்டரின் மனைவி சகுந்தலாவேதான். அதில் சந்தேகமே இல்லை. ஏதோ ஒரு சமயம், அதுவும் இரண்டு வருஷத்திற்கு முன்னால் சில வினாடிகள் தான் கவனித்திருக்கிறான். ஆனாலுமென்ன? அப்போது அவன் அவளைக் கண்ட சந்தர்ப்பத்தையோ, அல்லது அவளது மலர்ந்த முகத்தின் சாயலையோ மறக்கடிப்பதற்கான சக்தி காலத்திற்கு ஏது?

மேலே செல்ல முடியாமல் அதே இடத்தில் சிலை போல் நின்றான் மூர்த்தி. ஏன் அவன் மட்டும்தானா நின்றான்? அவனைத் தாக்கிய அதிர்ச்சி அவளையும்தான் ஒரு சிலை போல் நிறுத்திற்று. இரண்டே வினாடிகள்தான் அப்படியே நின்றிருப்பார்கள். ஆனால் அப்போது அவர்கள் உள்ளத்தில் தோன்றி மறைந்த நிகழ்ச்சிகள்தான் எத்தனை!

"ஏன் அம்மா!" என்று இடையே குறுக்கிட்ட ரங்கசாமியின் பதில் அவர்கள் சடலத்தில் உணர்ச்சியை உண்டு பண்ணிற்று. கனவிலிருந்து விழித்தவன் போல் சட்டெனத் தன் பார்வையை ரங்கசாமியின் பக்கம் திருப்பினாள். ஏதோ சொல்ல வாயெடுத்தாள். ஆனால் ஒன்றும் கூறாமல் வேகமாய் உள்ளே சென்று விட்டாள்.



தகப்பனார்:—ஏண்டா பயலே! நீ படிக்கிற அழகுக்குப் புதுப் புஸ்தகங்கள் எதற்கடா வாங்கிறாய்? பழைய புஸ்தகங்களை வாங்குவதற்கென்ன?

தாயார்:—குழந்தையைப் போட்டு எதுக்கு வீணாகக் கோபிச்சுக்கிறேயள்? நாலு நாள் போனால் தன்னாலே எல்லாப் புஸ்தகமும் பழசாகி விடுகிறது!

மூர்த்திக்கோ தான் கலெக்டரிடம் வந்த காரணம் கூட மறந்து விட்டது. சகுந்தலா, கலெக்டரின் மனைவி என்பதை உணர்ந்த பிறகு அவன் மனம் பரபர வென்று பழைய சம்பவங்களையெல்லாம் மின்னல் வேகத்தில் 'அவன் கண்ணெதிரே கொணர்ந்து நிறுத்திற்று.

* * *

இரண்டு வருஷத்திற்கு முன்னால்— அப்போது மூர்த்தி தன் வருங்கால வாழ்க்கைத் துணைவியைத் தெரிந்தெடுப்பதற்காகச் சென்றிருந்தபோது — அவன் ஒரு சாதாரண கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தா தான். வேலையில் ரொம்பவும் கெட்டிக்காரன். பதவியில் உயர்வதற்கு வேண்டிய அத்தனை 'டெஸ்டு'களையும் பாஸ் செய்திருந்தது மட்டுமல்லாமல் தலைமை அதிகாரிகளுடைய நன்மதிப்பையும் பூரணமாகப் பெற்றிருந்தான்.

இப்படிப்பட்ட ஒரு நல்ல பிள்ளை, அதுவும் பிரம்மச்சாரியாக இருக்கிறான் என்றால் கேட்பானேன்? பல இடங்களிலிருந்தும் வரன்கள் வந்து குவிந்தன.

அவன் முதல் முதல் பார்க்கப் போன பெண் சகுந்தலா தான். சகுந்தலா ராமகிருஷ்ணய்யரின் மூத்த பெண். பாவம், சகுந்தலாவின் அப்பா பெரிய சம்சாரி. அவர் ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மானேஜர். அதிலிருந்து வரும் ரூபாய் நூற்றைம்பது தான் அவருக்கு உள்ள ஆஸ்தி. ஆனால் கருணையற்ற கடவுள் குழந்தை குட்டிகள் விஷயத்தில் அவருக்கு வஞ்சனையின்றிக் கடாட்சித்திருந்தான். அவருக்கு மொத்தம் ஒன்பது குழந்தைகள். முதல் எட்டும் பெண்கள். கடைசிக் குழந்தை ராஜு. என்ன செய்வார்? சகுந்தலாவிற்குக் கைநிறையப் பணம் கொடுத்துக் கல்யாணம் செய்து வைக்க அவரிடம் ஆஸ்தி இல்லை. ஆனால் சகுந்தலாவை மட்டுமல்ல — யாவரையுமே நன்றாய்ப் படிக்க வைத்திருந்தார்.

* * *

பெண்ணைப் பார்க்கச் சென்ற மூர்த்திக்குச் சகுந்தலாவைப் பிடித்திருந்தது. அவளது களையான முகத்தில் நிலை பெற்று நின்ற இளமுறுவலும், குறு குறு வென்ற பார்வையும் மூர்த்தியின் உள்ளத்தை அடிமை கொண்டன.

எதிர் ஜாமீன் என்ற பேச்சிலேயே அவனுக்கு ஒரு வெறுப்பு. 'பெண்ணைத் தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமே தவிரப் பணத்தை அல்லவே' என்பதுதான் அவன் கொள்கை. இதை வெளிப்படையாக அன்று சகுந்தலாவின் தகப்பனாரிடமே சொல்லி விட்டான்.

"எனக்கு உங்கள் பெண்ணைப் பிடித்திருக்கிறது. ஆனால் நீங்கள் எனது பெற்றோர்களை மட்டும் மனம் கோணாதவாறு செய்து விடுங்கள்!" என்று சொல்லி விட்டான்.

சகுந்தலா குதூகலத்துடன் தான் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலி என்று பெருமை கொண்டு தேவியின் படத்தின் முன் நின்று ஆனந்தக் கண்ணீர் விட்டாள். மூர்த்தியுடன் தான் எப்படி யெல்லாம் தனிக் குடித்தனம் நடத்த வேண்டும் என்று நினைக்கும்போது அவளுக்கே வெட்கமாக இருந்தது. ஆனால்! விதி வேறு விதமாக இருக்கிறதென்பதை அவள் எப்படி உணர்ந்திருக்க முடியும்?

* * *

மூர்த்திக்கென்னவோ பூரண சம்மதம் தான். ஆனால் அவன் பெற்றோர்களுக்கு அந்த வரன் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

"பெண் நன்றாய் இருந்தால் மட்டும் போதுமா? எதிர் ஜாமீன் ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்குக்கூட அவள் தகப்பனாருக்கு வக்கில்லை. எட்டுப் பெண்களுக்குமத்தியல் இவனுக்கு என்னத்தைச் செய்து புரட்டிவிடப் போகிறான் மனிதன்? இந்த வரன் வேண்டவே வேண்டாம்." இம்மாதிரி ஏகோபித்த முடிவுக்கு வந்து விட்டார்கள் மூர்த்தியின் அப்பாவும் அம்மாவும். மூர்த்தி பெற்றோரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவன். அவனுக்குப் பெற்றோர்களுடைய முடிவு துக்கமாகவே இருந்தது. மனம் உடைந்து அவர்கள் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு மௌனமாகி விட்டான். அவனுடைய குறையை யாரிடம் வெளியிட்டுப் பேசுவான்? தன் குறையையும் தன் நிலைமையையும் தெரிவித்து ராமகிருஷ்ணய்யருக்கு யாருக்கும் தெரியாதபடி விவரமாக ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டான்.

சற்றும் எதிர்பாராததும் உருக்கமானதுமான மூர்த்தியின் கடிதம் ராமகிருஷ்ணய்யரின் குடும்பத்திலேயே ஒரு சோகத்தை உண்டு பண்ணிவிட்டது. சகுந்தலாவின் வருத்தம் எல்லையற்று நின்றது.

விதியின் கூத்து, பணத்தின் கொடுமை, குடும்பக் கட்டுப்பாட்டின் அவஸ்தை யாவும் சேர்ந்து அந்தப் பேதைப் பெண்ணை ஒரு இன்பமற்ற வாழ்க்கையில் தள்ளிற்று. கலெக்டர் ராஜய்யர் சகுந்தலாவை மூன்றாம் தாரமாக மணந்து கொண்டார்.

சகுந்தலா கலெக்டரின் மனைவி தான். அவளுக்குச் செல்வாக்கும் அதிகாரமும் கணக்கற்று இருந்தன. அவள் ஒன்று நினைத்தால் அடுத்த நிமிஷம் நடக்கும். எல்லா

விதத்திலும் அவன் அதிர்ஷ்டசாலி தான். 'ஆனாலும் என்னவோ பிறரிடத்தில் சொல்ல முடியாத குறை ஒன்று அவனுக்குண்டு. அவன் உள்ளக் கிளர்ச்சியை—பெண்மையின் தாபத்தை—எப்படி வாய் விட்டு வெளிக் கூற முடியும்? அல்லது கூறத்தான் கூடியதா? உலகில் பெண்களின் மனத்தை அறிந்தவர் யார்?

* * *

எத்தனையோ மாறுதல்களை உண்டாக்கிக் கொண்டு காலம் கனவேகமாய்ச் சென்று மறைந்து கொண்டிருந்தது. கலெக்டர் ராஜமய்யர் ஆந்திர தேசத்திலிருந்து மூர்த்தி இருந்த ஜில்லாவுக்கு மாற்றப்பட்டார்.



அப்போதுதான் ஒருநாள் தன் வேலை உயர்வு விஷயமாய் மூர்த்தி கலெக்டரை பேட்டி காணச் சென்றிருந்தான்.

"மிஸ்டர் மூர்த்தி, நான் உங்களைப் பற்றிப் பூராவும் தெரிந்து கொண்டேன். ரொம்ப சந்தோஷம். ஆனாலும் உங்களை விட ஒரு வருஷம் அதிகமாக 'ஸர்விஸ்' ஆனவர்கள் இரண்டு பேர் இருக்கும் போது இப்போது அவர்களை அலட்சியம் செய்துவிட்டுப் உமக்குப் 'பிரமோஷன்' கொடுப்பதென்பது அவ்வளவு சுலபமான காரியம் இல்லை. இருப்பினும் என்னால் ஆன உதவி உங்களுக்கு என்றும் உண்டு. என்பதை நம்பலாம்" என்று கடைசியாக கலெக்டர் மூர்த்திக்குக் கூறிய வார்த்தைகள் அவன் காதுகளில் எதிரொலி செய்து கொண்டே இருந்தன. ஆழ்ந்த பெருமூச் செறிந்து விட்டு மாடிப் படியிலிருந்து கீழே வந்து கொண்டிருந்தான்.

படிகளை விட்டுக் கீழே இறங்கியதும் தானாகவே அவன் பார்வை கீழ்ப் படிஅருகில் சென்றது. அவன் வரவை எதிர்நோக்கிச் சகுந்தலா திரும்பவும் அதே இடத்தில் நின்று கொண்டிருந்ததை அவன் எதிர்பார்க்கவே இல்லை. சட்டென்று தலையைக் குனிந்து கொண்டு அவளைப் பார்க்காததுபோல் சென்றுவிட வேண்டும் என்று எண்ணினான்.

ஆனால் எதிர்பாராது வெளிப்பட்ட ஒரு குரல் அவனைத் தடைப்படுத்திற்று.

சகுந்தலாவேதான் பேசினாள்: "என்னை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?" மூர்த்தி ஒரு விநாடி திகைத்து நின்றான். அவன் மனதில் அந்த ஒரு விநாடியில் பிரதிபலித்த எண்ணங்கள் கணக்கற்றவை. சாவதானமாகவே, "தெரியும்" என்று பதில் கூறினான் மூர்த்தி.

"உங்கள் தாயார் தகப்பனார் சௌக்கியம்தானே?"

தலையை அசைத்தபடியே 'ஊம்' என்றான் மூர்த்தி.

மன்னிக்கவும்...உங்களுக்குக் கல்யாணமாகிவிட்டதோ?"

மறுபடியும் "ஆம்" என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் மூர்த்தி.

"ஒரு நாள் உங்கள் மனைவியை இங்கு அனுப்பி வையுங்களேன்; டபேதாரை வீட்டுக்கு அனுப்புகிறேன். உங்களுக்கு ஒன்றும் தடையில்லையே?"

மூர்த்திக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை.

"என்னுடன் பேசுவதற்கு அவளுக்கு எப்படி இவ்வளவு தைரியம் வந்தது? ஏன், பேசினால் என்ன தப்பு? ஆனால்

இதெல்லாம் எதற்காகக் கேட்கிறான்? திடீரென்று அவனுக்கு என் நம்மிடம் இவ்வளவு அபிமானம்?'—மூர்த்தியின் மனதிலேயே ஒரு சிறு போராட்டம்.

"அதற்கென்ன? ஆகட்டும்" என்றான்.

உயர மாடிப் படியில் காலடிச் சத்தம் கேட்டது. கலெக்டர் ராஜமய்யர் கீழிறங்கி வந்து கொண்டிருந்தார். மூர்த்தியும் சகுந்தலாவும் அங்கு பேசிக் கொண்டு நின்றதை அவர் பார்த்து விட்டார். மூர்த்தியின் மனதில் ஓர் அச்சம். சட்டென்று "நான் வருகிறேன்" என்று இரு கைகளையும் கூப்பியபடியே வெளியே வந்துவிட்டான் மூர்த்தி.

கடைசியாகக் கைகூப்பி விடை பெற்றுக்கொண்டபோது தென்பட்ட அவளுடைய பார்வையிலேயே அவள் உள்ளம் பூராவும் அறிந்து கொண்டு விட்டான் அவன்.

மூர்த்தி பங்களாவை விட்டு வெளியே வந்தான். வீடு திரும்பும் வழியெல்லாம் அவன் மனம் குறை குடம்போல் தளும்பிக் கொண்டே இருந்தது. அவன் மனதில் அப்போதிருந்த சிந்தனைகளே வேறு. அவனுக்குத் தனது வேலை உயர்வு விஷயமாய்க் கலெக்டரைப் பார்த்துவிட்டு வந்தது கூட மறந்துவிட்டது. ஆனால் அன்று பங்களாவில் நடந்தவற்றை மட்டும் அவனால் மறக்க முடியவே இல்லை.

"அதெல்லாம் சரி தான். ஆனால் அவள் பேசிக் கொண்டிருந்ததை அவர் கவனித்து விட்டாரே! ஒரு சமயம் ஏதாவது தப்பாக எண்ணியிருப்பாரோ? அப்படியே எண்ணியிருந்தாலும் கூட நம்மைப் பற்றி அக்கரையில்லை. நிரபராதியான அவளுக்கு அதனால் ஏதேனும் தீங்கு நேரிடுமோ? சகுந்தலாவினிடத்தில் ராஜமய்யர் தவறான எண்ணத்துடன் கோபம் கொள்ளக் கூடுமோ? ஒரு சமயம் என்ன ஆகுமோ?"—இப்படியெல்லாம் இடை யிடையே பல எண்ணங்கள் தோன்றி அவன் உள்ளத்தைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தன.

• • •

மறு நாள். பன்னிரண்டு மணி. ஆபீஸில் உட்கார்ந்து எதையோ புரட்டிக் கொண்டிருந்தான் மூர்த்தி. என்றுமில்லாதபடி அன்று கலெக்டர், ஆபீஸுக்கு வந்திருந்தார். ஆபீஸே அன்று சுறுசுறுப்பாகத் தென்பட்டது.

டபேதார் ரங்கசாமி வேகமாக மூர்த்தியின் அருகே வந்து, "ஸார், உங்களை எஜமான் கூப்பிடுகிறார்" என்றான்.

பரபரவென்று இடத்தை விட்டெழுந்து கலெக்டரின் முன் சென்று நின்றான் மூர்த்தி. அவன் மனம் 'பக் பக்' கென்று அடித்துக் கொண்டது.

கலெக்டர் தலை நிமிர்ந்து மூர்த்தியைக் கவனித்தார். அவர் முகத்தில் ஓர் புன்முறுவல் படர்ந்தது.

"மிஸ்டர் மூர்த்தி, இப்போது உங்களைத் தனிப்பாளையம் தாலூகா டிப்டி தாசில்தாராக நியமித்திருக்கிறேன். அங்கு நீங்கள் இடைவிடாத உழைப்பினால் நல்ல பெயரெடுத்து முன்னுக்கு வர வேண்டுமென்று ஆசி கூறுகிறேன்" என்று கூறினார்.

எதிர் பாராத கலெக்டரின் உத்தரவு மூர்த்திக்கு ஓர் அதிர்ச்சியையே உண்டு பண்ணிற்று. அவனுக்குப் பதில் பேசக் கூட முடியவில்லை. ஏதேதோ பேச வாயெடுத்தான். ஆனால் அவன் உதடுகள் மட்டுந்தான் அசைந்தனவே யன்றி ஒரு வார்த்தை கூட வெளிப்படவில்லை.

"சரி; நீங்கள் போகலாம். நாளையே வேலையை ஒப்புக்கொண்டு விடுங்கள்... ஊம்" என்றார் கலெக்டர்.

கைகூப்பி வணக்கம் தெரிவித்து விட்டு மூர்த்தி வெளியே வந்தான். முதல் முதலாகத் தன் சந்தோஷத்தைத் தெரிவிக்கப் பின்னால் ஓடிவந்தான் ரங்கசாமி. "உங்களுக்கென்ன எஜமான்? எஜமானியம்மா தயவுதான் பூரணமாய் இருக்கே! நேத்துக் கூட நீங்க வந்தப்புறம் எஜமானும் அம்மாவும் உங்களைப் பத்தித்தான் ஏதோ பேசிக்கிட்டிருந்தாங்கோ" என்று அவன் கூறிக் கொண்டிருக்கும் போதே, அதற்குள் எப்படியோ விஷயம் தெரிந்த குமாஸ்தாக்கள் மூர்த்தியை எதிர் கொண்டழைத்துக் கைகுலுக்கி ஆரவாரம் செய்தனர். மனத்தில் ஏதோ பெரும் பாரம் அழுத்திக் கொண்டிருக்க ஓர் அசட்டுச் சிரிப்புடன் யாவருக்கும் நன்றி கூறினான் மூர்த்தி.

முதல் நாள் பங்களாவில் நடந்த சம்பவங்கள் பூராவும் அவன் மனக்கண் முன் கண்ணாடிபோல் பிரதிபலித்தது. "எல்லாம் அவள் செய்த வேலையாகத்தான் இருக்க வேண்டும். அவள் உள்ளத்தில் தான் எத்தனை கருணை?"—அதை நினைக்க நினைக்க நிலைகொள்ளாது ததும்பிற்று அவன் மனம்.

மூர்த்தியின் உள்ளத்திலிருந்து நீண்டதொரு பெருமூச்சு 'உஸ்'ஸென்று வெளிப்பட்டுக் காற்றுடன் கலந்தது. "கடவுள் அவளுக்கு எல்லா நன்மைகளையும் கொடுக்கட்டும்" என்று அவன் உள்ளம் அவளை மனமார வாழ்த்திற்று.




திண்ணமாகவும் நிச்சயமாகவும் பொதுமக்களுக்கு யுத்தகாலத்தாலேற்பட்ட தொந்தரவுகள் விலகி வருகின்றன. பொருட்குறைவும் கட்டுப்பாடுகளும் இன்னும் இருந்தபோதிலும் கடினமான கட்டத்தை தாண்டிவிட்டோம். மிகக் கடுமையான காலங்களில் ஆறுதலளித்து வந்த டீயை இப்பொழுது பூரணமாக அனுபவித்து ஆனந்திக்கலாம். களைத்தோரைத் தேற்றி வரும் டீ இன்று குடும்பத்தினரிடையும், நண்பர்களிடையும் ஆனந்தமளிக்கவல்ல ஓர் அரும் பொருளாக விளங்குகிறது. உலகில் நிரந்தர சமாதானத்தை நிறுவ டீக்கும் ஒரு பங்கு உண்டு.













சமாதான காலத்திலும், யுத்த காலத்திலும்

டீ யை நம்புங்கள் . . .

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK 252

படித்துப் பார்!

கம்பன் கவியமுதம்

[பிரசுரம்: சென்னைக் கம்பர் கழக வெளியீடு; விற்பனை உரிமையாளர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; விலை: ரூ. 2-8-0]

தமிழன் இலக்கியப் பெருமையில் இறும்பூது எய்த வேண்டுமானால் கம்ப ராமாயணத்தில்தான் எய்த வேண்டும். காவியப் பெருமையில் களிகொள்ள வேண்டுமானால் கம்ப ராமாயணத்தில்தான் கொள்ள வேண்டும். கவியின்பத்தில் திளைத்துக் கவியின் அற்புதக் காட்சிகளைக் காண வேண்டுமானால் கம்பர் தரும் காட்சியில்தான் காண வேண்டும். தமிழன் நாடகக் கலையின் நுட்பத்தை நாடியறிய வேண்டுமானாலும் கம்பனிலுள்ள நாடகப் பண்பைத்தான் நாட வேண்டும். இப்படி எல்லா விஷயங்களுக்கும் உறைவிடமாக விளங்கும் கம்பராமாயணத்தைக் கலைப் பொக்கிஷம் எனவே கூறலாம்.

கம்ப ராமாயணத்திலுள்ள பல ரஸமான கட்டங்களிலிருந்து பதினேழு கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த நூலில், பதினேழு கட்டுரைகளும் பதினேழு தமிழறிஞர்களால் எழுதப்பட்டவை. கம்பன் கவி அமுதத்தைப் பற்றி 'அமுதமாயிருக்கிறது' என்று கூறுவதைத் தவிர வேறு கூறுவதற்கு என்ன இருக்கிறது?

ஊழியர்களின் வழிகாட்டி

[ஆசிரியர்: ராம் நாத் கமன்: மொழிபெயர்ப்பு: என். என். ராமசந்திரன்; பிரசுரம்: தமிழ்ப்பண்ணை; தியாகராயநகர், சென்னை; விலை: அணா 12.]

ஒரு முறை காந்திஜி காங்கிரஸின் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டபோது ஒரு முக்கியமான தலைவர் அவரைப் பார்த்து, "நீங்கள் கைது செய்யப்பட்டால் யாரைச் சர்வாதிகாரியாக நியமிப்பீர்கள்?" என்று கேட்டார். காந்திஜி பளிச்சென்று "ஏன்? ராஜாஜி இருக்கிறாரே?" என்றார்.

இத்தகைய பல ரஸமான சம்பவங்களைச் சேர்த்து ராஜாஜிதான் ஊழியர்களின் உண்மையான வழிகாட்டி என்பதாக ஒரு வடநாட்டு அறிஞர் ஹிந்தி பாஷையில் புஸ்தகம் எழுதியிருக்கிறார். இப்படி நமது தமிழ் நாட்டுத் தலைவரைப் பாராட்டும் வடக்கத்தியாரும் இருக்கிறார்களே என்று ஆச்சரியப்பட்டு மேற்படி கட்டுரையைத் தமிழ்ப் பண்ணைக்காரர்கள் தமிழ்ப் படுத்தி வெளியிட்டிருப்பதைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

யுத்தகால இலக்கியம்

[ஆசிரியர்: "கலி," பிரசுரம்: புதுமலர் நிலையம், கோயமுத்தூர்; விலை: ரூ. 1-8-0]

பண்டைக் காலத்தில் கொடும் போர் நடந்து முடிந்த தமிழ் நாட்டுப் போர்க்கள நிகழ்ச்சிகளைப் பொருளாக வைத்து இலக்கியங்கள் இயற்றுவது மரபு. இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் ரணகளத்தில் உயிருக்கு யமனுடன் இறுதிப்போர் நடத்தும் மலை போன்ற யானைகளும், வீரப்போர் புரிந்து வீர மரண மெய்திய வீரர்களும் விழுந்து கிடக்க, பேய்களும் பூதங்களும் களியாட்டம் ஆடும் அதிசயத்தைப் பற்றி விவரிக்கும் நூலுக்குப் பரணி என்று பெயர்.

அம்மாதிரியே இந்த இருபதாம் நூற்றாண்டு மகாயுத்தத்திலும் ஏற்பட்டிருக்கும் அல்லல்களைப்பற்றி விவரிக்கிறது இந்நூல். யுத்தத்திலுள் ஏற்பட்ட பஞ்சம், கள்ளமார்க்கெட்டு, கொள்ளை லாபம், ரயில் பிரயாண நெருக்கடி இவைகளை வைத்துக் கொண்டு ஹாஸ்யரஸம் ததும்ப எழுதியிருக்கிறார் இந்நூலாசிரியர்.

சபாஷ் தர்பார்! பலே பார்த்தசாரதி!



கர்நாடக சங்கீதத்தின் கவர்ச்சியுள்ள ராகங்களிலே தர்பார் ஒன்று. அந்த ராகத்தைப் பாடுகிறபடி பாடினால் சங்கீத சக்கரவர்த்தியின் கோலாகலமான தர்பார் நடப்பது போலத்தான் இருக்கும். அத்தகைய அழகிய கம்பீரமான ராகத்தின் ஜீவ களை முழுவதையும் ஊட்டி மகான் தியாகராஜர் 'முந்துவெனுக' என்ற கீர்த்தனத்தை இயற்றியுள்ளார். அந்த மகா ஸாஹித்ய கர்த்தர் சொர்க்கத்திலிருந்து திரும்பி வந்து கேட்டாலும் மனம் குளிர்ந்து மகிழும் படி ஸ்ரீ என். வி. பார்த்தசாரதி மேற்படி கீர்த்தனத்தைக் கொலம்பியா ஜி. இ. 6305 இசைத்தட்டில் பாடியிருக்கிறார்.

ஒரு நிமிஷ நேரத்திற்குள்ளே தர்பார் ராகத்தின் அழகான ஸ்வரூபத்தை நமது அகக் கண் முன்னால் சித்திரித்துக் காட்டிவிட்டு, பிறகு கீர்த்தனத்தை எடுத்துக்கொண்டு சங்கதிக்கு மேல் சங்கதியும் பிர்க்காவுக்குமேல் பிர்க்காவுமாகப் பொழிந்து தள்ளிக்கொண்டு போகிறார். துரித காலத்தில் பிருகுடனும் விருவிருப்புடனும் பாடியிருக்கும் அடுக்கடுக்கான ஸ்வரவரிசைகளில் ஒரே ஒரு குறை நான் சொல்லலாம்; அதில், 'அபஸ்வரம்' என்பது மருந்துக்குக் கூட இல்லையே என்பதுதான்!

சரணத்தில் 'ஓ கஜரக்ஷகா! ஓ ராஜகுமாரா!' என்று பகவானைக் கூவி அழைக்கும் இடத்திலே நல்ல உருக்கத்தோடு சந்தர்ப்பத்துக் கேற்ற விரைவும் பொருந்தியிருக்கிறது. இன்னும் கொஞ்சம் விஸ்ராந்தியாகச் சவுக்க காலத்தில் பாடியிருக்கக் கூடாதா என்று நினைக்கத் தோன்றலாம். ஆனால் முதலையின் வாயில் காலைக் கொடுத்திருக்கும் யானைக்கு அல்லவா அந்த நிலைமையின் அவசரம் தெரியும்? மற்றவர்களுக்கு என்ன தெரியப் போகிறது?

மொத்தத்தில் கர்நாடக சங்கீதத்துக்கு ஒரு அருமையான இசைத் தட்டு. கேட்ட உடனே "சபாஷ் தர்பார்! பலே பார்த்தசாரதி!" என்று சொல்லத் தோன்றுகிறது. இலக்கிய உலகத்தில் தகப்பனார் (என். வி. வி.) பெற்ற பெயரை இசை உலகத்தில் புதல்வர் பெறுவார் என்றும் நம்பத் தோன்றுகிறது.



டி. கே. சி.

146. மிஞ்சியது இடது கை!

கரனும் ராமனும் எதிரெதிரே நிற்கிறார்கள்.

ஒரு தந்திரத்தினால், ஏதோ ஆயிரக் கணக்கான அம்புகள் வந்து ராமனது உருவத்தையே மூடி விட்டது என்று எண்ணும்படி தோற்றுவித்தான் கரன்.

ராமனுக்குக் கோபம் உண்டாய் விட்டது.

'இதோ இவனைத் தொலைத்து விடுகிறேன்' என்று சொல்லிக் கொண்டு அம்பு தொடுத்து, வில்லின் நாணை வலுவாக இழுத்தான். இழுத்த இழுப்பில் வில்லின் தண்டு முறிந்து விட்டது. முறிந்த சப்தம் இடி போலக் கேட்டது. லக்ஷ்மணன் அப்படியே ஓடி வந்து பரசுராமன் கொடுத்த வில்லை அண்ணன் கையில் கொடுத்து விட்டான்.

அந்தப் பரசுராமன் வில்லை ராமன் கையில் ஏந்தின மாத்திரத்தில் பார்த்தவர்களுக் கெல்லாம் ஒரே பயமாய்ப் போய் விட்டது.

கொடுத்த வில்லைஅக்
 கொண்டல்நி றத்தினன்
எடுத்து வாங்கி
 வலங்கொள் இடக் கையில்
பிடித்த போது,—
 நெறிபிழைத் தோர்க்கெலாம்
துடித்த வால், இடக்
 கண்ணொடு தோளுமே.

[கொண்டல் நிறத்தினன்: நீல நிறத்தனான ராமன்; நெறி பிழைத்தோர்க் கெல்லாம்: நெறி தப்பி வாழும் அரக்கர்களுக்கு எல்லாம்; துடித்த வால் இடக் கண்ணொடு தோளுமே: அச்சகுனமாக இடது கண்ணும் இடது தோளும் துடித்தன.]

வாங்கிய வில்லில் நாணை ஏற்றினான் ராமன். ஒரு நொடியிலேயே வில்லைத் தூக்கிப் பிடித்து வேகமாக வளைத்தான். பார்த்தவர்கள் நடுங்கும்படியாய் இருந்தது அப்படி வளைத்தது. ஆனால் எமனுக்குக் கொண்டாட்டந்தானே!

அம்புகளும் புறப்படுகின்றன.

ஏற்றி நாண், இமை
 யாமுன்ன டுத்(து)அதைக்
கூற்றி னாரும்
 குனிக்கக்கு னித்(து)எதிர்
ஆற்றி னான்அவன்
 ஆழியந் தேர், சரம்
நூற்றி னால்நுண்
 பொடிபட நூறினான்.

[ஏற்றி நாண்: நாண் ஏற்றி; இமையா முன் எடுத்து: ஒரு விநாடிக்கு முன்னே எடுத்து; கூற்றினாரும் குனிக்க: எமனும் சந்தோஷத்தினால் துள்ளிக் குதிக்கும்படி; குனித்து: வளைத்து; எதிர் ஆற்றினான் அவன் ஆழியந்தேர்: எதிரில் நின்று போர் புரிந்து கொண்டிருக்கிற கரனது பெரிய சக்கரம் கொண்ட தேரை; சரம் நூற்றினால்: நூறு அம்புகளால் (பல அம்புகளால்) நுண் பொடிபட நூறினான்: சுக்குச் சுக்காய்ப் போகும்படி நொறுக்கினான்;]

தேர் அழிந்தது. கீழே இறங்கி விட்டான் கரன். கோபாவேசத்தோடு ஆகாயத்தில் பெருங் கூச்சல் இட்டுக் கொண்டு ஒரே குதியாய்க் குதித்தான்.

எந்தி ரத்தடந்
தேர்அழிந் தான்,இழிந்(து)
அந்த ரத்திடை
ஆர்த்தெழுந்(து), அம்பெலாம்
சுந்த ரத்தனி
வில்லிதன் தோள்எனும்
மந்த ரத்தின்
மழையின்வ ழங்கினான்.

[எந்திரத் தடந் தேர் அழிந்தான்: பல விதமான பொறிகள் வைத்த தனது தேர் அழிந்தவனாய்; இழிந்து: பூமியில் இறங்கி; அந்தரத் திடை ஆர்த்து எழுந்து: அம்பெலாம்: தன்னிடத்திலுள்ள அம்புகளெல்லாம்; சுந்தரத் தனி வில்லின்: அழகிய ஒப்பற்ற வில் ஏந்திய ராமனது; தோள் எனும் மந்திரத்தில்: தோள் என்னும் மந்தர கிரியின் மீது; மழையின் வழங்கினான்: மழை பெய்தாற் போல் எறிந்தான் அம்புகளை.]

கரன் எய்த அம்பை யெல்லாம் பொருட் படுத்தாமல் சகித்துக் கொண்டிருந்தான் ராமன். பிறகு என்ன வேலை செய்தான்: பார்க்கலாம். கரன், வலது தோளுக்குப் பின் தொங்கிய அம்பறாத் தூணியி லிருந்து தன்னுடைய பலத்த வலக் கையினால் ஒரு அம்பை எடுத்த வண்ணமாய் இருந்தான்.

தாங்கி நின்ற
தயரத ராமனும்,
தூங்கு தூணி
இடைச்சுடு வெஞ்சரம்
வாங்கு கின்ற
வலக்கை,ஓர் வாளியால்
வீங்கு தோளொடு
பார்மிசை வீழ்த்தினான்.

[தூங்கு தூணியிடை: முதுகில் வலது பக்கம் தொங்கிக் கொண்டிருந்த அம்பறாத் தூணியில் இருந்து; சுடு வெஞ்சரம் வாங்கு கின்ற வலக்கை: கொடிய அம்பு ஒன்றை எடுத்துக் கொண்டிருந்த கரனது வலக் கையை; ஓர் வாளியால்: ஒரு அம்பினால்.]

கரனது தேர் நொறுங்கிக் கீழே இறங்க வேண்டி வந்தது. பிறகு வலக் கையும் அறுபட்டுப் பூமியில் விழுந்து விட்டது. இடது கையும் வில்லும்தான் மிச்சம். மிகப் பரிதாபமான நிலைமை!

காலக்ஷேபம்

வேலைக்குக் கூலி!

வீட்டுக்காரர்:—ஏனப்பா, துணியைக் கெட்டுப் போக்கினது மில்லாமல் அதற்குக் கூலி வேறு கேட்கிறாயா?

சலவைத் தொழிலாளி:— அது காணாமல் போவதற்கு முந்தியே சலவை செய்து விட்டேனுங்க! —பி. கே. கிருஷ்ணமூர்த்தி.

'பில்' இல்லையே?

டாக்டர்:—உங்கள் வியாதி குணமானதற்கு உங்கள் தேகத்திலிருந்த பலம்தான் காரணம் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

வியாதியஸ்தர்:—அப்படியானால் 'பில்' ஒன்றும் அனுப்ப மாட்டீர்களே!

வி. ராமச்சந்திரன்.

போதாத வேளை

ஜோஸியர்:—உங்கள் பத்திரிகையில் பெரிசாக விளம்பரம் செய்தேன். அதற்கு ஒருத்தராவது கடிதம் எழுதவுமில்லை. வீட்டிற்கு வரவும் இல்லை.

விளம்பர அதிகாரி:—உங்களுடைய போதாத வேளைதான்; உங்கள் ஜாதகக் குறிப்பை வேறு எந்த ஜோஸியரிடம் கொண்டு போய்க் காட்டுங்கள். —கே. மோஹன்.



புருஷன்:—மீனு, இன்னொரு மைசூர்ப்பாகு சாப்பிடுகிறாயா?

மனைவி:— அதென்ன, 'இன்னொரு மைசூர்ப்பாகு' என்கிறீர்கள்? ஒன்றுகூட வந்தபாடில்லையே?

புருஷன்:—மறந்து விட்டாயா, என்ன? நமக்குக் கல்யாணம் ஆன புதிதிலே இந்த ஓட்டலுக்கு வந்து ஒரே ஒரு மைசூர்ப் பாகு சாப்பிட்டது நினைவில்லையா? இப்போது இன்னொன்று சாப்பிடுகிறாயா என்று கேட்கிறேன்.

அப்பாவுக்கு பயம்!

தாயார் (விஷமப் பிள்ளையிடம்):—பிடிவாதம் பிடித்து அடம் பண்ணினாயோ, உன்னைப் போலீஸ்காரனிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன். போலீஸ்காரனைக் கூப்பிடட்டுமா?

பிள்ளை:—கூப்பிடு; அப்பா சைகிளுக்கு லைசென்ஸ் வாங்காததை நான் சொல்லி விடுகிறேன். —பி. ராஜப்பா.

அவனிடம் இருப்பது!

பள்ளி உபாத்தியாயர்:—டேய், ராமு! உனக்கு உங்கள் அப்பா தினமும் இரண்டு அணா வீதம் ஐந்து தினங்கள் தந்தால், உன்னிடம் என்ன இருக்கும்?

ராமு:—இரண்டு கோலிக்குண்டு, ஒரு பலூன், ஒரு ஊதல், ஸார்! —என். வி. துரைசாமி.

★

அப்படியா?

கோபு (ராமுவிடம்):— பீட்டு ரொம்ப கஷ்டப்படுகிறான். அவன் கடன்காரர்கள் அவனைத் தொந்தரவு செய்கிறார்கள். நீயாவது நூறு ரூபாய் கொடுத்து உதவேன்!

ராமு:—அவன் யாருக்குக் கடன் தரணும்?

கோபு:—எனக்குத்தான்.

—எம். எஸ். துரைசாமி.

யாருக்கு அதிர்ஷ்டமில்லை?

ஒரு ரயில் ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டு விட்டது. மூன்று பேர்வழிகள் ஓட்டமாகப் பின் தொடர்ந்து ஓடினர். தைரியம் மிகுந்த ஸ்டேஷன் மாஸ்டர் சாமர்த்தியமாக ஒரு பெட்டியில் இரண்டு பேரை ஏற்றிவிட்டார். ரயில் போய் விட்டது. மூன்றாவது ஆசாமி சிரித்துப் போனார்.

ஸ்டேஷன்மாஸ்டர்:—அவர்களுக்குத்தான் அதிர்ஷ்டம் இருந்தது. உங்களுக்கில்லை.

மூன்றாவது ஆசாமி:—ஏன்? அவர்களுக்கும் கூட அதிர்ஷ்டம் இல்லை. ஊருக்குப் போகிறவன் நான்தான். அவர்கள் வழி அனுப்ப வந்தவர்கள்.

—ஆர். எஸ். கவிராஜன்.

என்ன வயது?

பெரியவர்:—பையா, உன் வயதென்ன?

பையன்:—எட்டு.

பெரியவர்:—நீ என் குடையளவுகூட இல்லையே?

பையன்:—உங்க குடைக்கு என்ன வயதோ?

—எம். எஸ். கு.

வெஜிடபிள் கதம்ப ஊறுகாய்



வெள்ளரிக்காய், இஞ்சி, பாவக்காய், கீரைத்தண்டு, வாழைத் தண்டு, கத்தரிக்காய், பச்சை மிளகாய், பச்சை மிளகு — சொல்லும்போதே வாயில் ஜலம் ஊறுகிறது — முதலியவை சேர்த்து கைபடாமல் ஜிஞ்ஜாமிருதமாகத் தயாரிக்கப்பட்டது. வாய்க்கு வெகு ஜோர். உடம்பிற்கு பரம சுகம். இன்றே உங்கள் தேவைக்கு எழுதவும். இரு சைஸ்களில் கிடைக்கும்

•

தயாரிப்பவர்கள் :

டி. எஸ். ஆர். & கோ.,

வாசனை திரவிய வியாபாரிகள்

கும்பகோணம்

மதராஸ் ஏஜெண்டுகள் :


மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைகிராப்ட்ஸ்ரோடு. திருவல்லிக்கேணி

கோயமுத்தூருக்கும் பாலக்காடுக்கும்
சோல ஏஜெண்டு

S. பாலபட்டாபி,

வைசியாள் தெரு, கோயமுத்தூர்



ஆபரேஷனுக்குப்

பிறகும் அதிர்ச்சிக்குப் பிறகும், விபத்துக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. நீடித்த ரோகங்களாலும், பிரஸவத்தாலும், ஜுரங்களாலும் கூந்தல் நஷ்டமடைவதுண்டு. மயிர் விடாமல் உதிர்ந்து வந்தால், கேசத்துக்குப் பதில் அடித் தலையே புலப்படும்.

எந்த காரணத்தால் உதிர்ந்தாலும், கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். இழந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலை வளரச் செய்யுங்கள். இருக்கும் கூந்தலை இழக்காமல் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது.

விலை அணா 12.

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

போலிகளை வாங்கி மோசம் போகாதீர்கள். "கேசவர்த்தினி, தென்னிந்திய ரஸாயனசாலை" என்ற பெயர்களைக் கவனித்து வாங்குங்கள்.

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயனசாலை,

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்

என் அத்தான்

ரா. வெங்கடேசுவரன்



மோட்டார் வண்டி ஒன்று தினமும் வந்துவிட்டுப் போகும். அது கடைசியாக வந்துவிட்டுப் போவது அன்றையத்தினம் தான் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. டாக்டரை அனுப்பிவிட்டு அவர் உள்ளே வந்தார். முகத்தில் சோபையில்லை. "சரி, நிலைமை திருப்திகரமாக இல்லை போலிருக்கிறது. இன்றோ, நாளையோ அப்படித்தான். இதை நாம் கேட்பானேன்" என்று நான் என் வேலையைப் பார்க்கப் போய்விட்டேன்.

"என் அத்தானுக்காக அவருக்கு எவ்வளவு கஷ்டம்!" என்று என் மனம் நினைத்தது. என்றாலும் சும்மாயிருக்க முடியவில்லை. கூடத்திற்கு வந்தேன். "என்ன, டாக்டர் என்னதான் சொல்லுகிறார்?" என்று கேட்டேன்.

"என்னத்தைச் சொல்லுகிறது? ஒன்று சொல்லுகிறேன், சாவித்திரி! கோபித்துக் கொள்ளாதே."

அவருக்கும் எனக்கும் கல்யாணமாகி ஏழெட்டு வருஷங்கள் ஆகின்றன. கூடிய வரையில் சந்தோஷமாகத் தான் காலம் தள்ளிக்கொண்டு வருவதாகச் சொல்ல வேண்டும். மற்றவர்களைப் போல் வெளியே காட்டாமற் போனாலும், மாலையிட்ட அன்று எத்தகைய அன்போடிருந்தாரோ, அதே அன்போடுதான் இன்றுமிருந்தார். அதில் எனக்குப் பூர்ண நம்பிக்கை உண்டு. அப்படி இருப்பவர் 'கோபித்துக் கொள்ளாதே' என்று பீடிகை போட்டு ஆரம்பித்ததுதான் எனக்கு வருத்தத்தையும் கோபத்தையும் கொடுத்தது. மனதை அடக்கிக்கொண்டு "சரி, சொல்லுங்கள்" என்றேன்.

"அத்தான் - அம்மங்கான் நீங்கள் எவ்வளவோ பழகி இருப்பீர்கள். ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்திருப்பீர்கள். ஆனால் எனக்கென்ன தோன்றுகிறது தெரியுமோ? புதியவனான எனக்குத் தெரிந்ததுகூட உனக்குத் தெரியும் என்று என்னால் நம்ப முடியவில்லை. அவனை நாம் இங்கு வரச் சொன்னதே தவறு. அவனுக்கும் இந்த உலகத்துக்கும் சரியில்லை. அவன் ரொம்ப யோக்கியன். அதுதான் காரணம். அவன் வந்து கஷ்டப்படுவான். அவனுக்கு இந்த மாதிரி நோய் வரும் என்றெல்லாம் எனக்கு முன்னமேயே தெரியும். என் மனைவி தூக்கத்தைக் கூடத் திரஸ்கரித்து விட்டு அவனுக்குச் சிசுருஷை செய்கிறாளே என்ற அந்தப் பொறாமையினாலல்ல, நான் சொல்வது. உண்மை இதுதான் என்று நான் எண்ணுகிறேன். அப்பொழுதே இதெல்லாம் தோன்றிற்றென்றால் சொல்வதுதானே

என்று நீ கேட்கலாம். தங்கைக்கும் மேலாக அவனோடு பழகிய நீ சொன்னபின், அதுவும் அவனுடைய கடிதத்தையும் பார்த்தபிறகு, என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. என்றாவது உன் முகம் கோணும்படி நடந்து கொண்டிருக்கிறேனா?" என்றார். தொடர்ந்து, "எல்லா டாக்டரையும் போலில்லை இவர். உண்மையைச் சொல்லி விட்டார்" என்று கூறி முடித்தார்.

சிறு வயதிலேயே தந்தையையும் தாயையும் இழந்த நான் அத்தானுடன் அத்தை அகத்தில் வளர்ந்தேன். 'தாயில்லாப் பெண்' என்று அத்தைக்கும் அத்திம்பேருக்கும் என்மேல் அத்யந்தப் பிரியம். ஆனால் என்னைப் பிடித்த துரதிர்ஷ்டம் அத்தானையும் பிடித்து விட்டது போலிருக்கிறது. தன் அன்னையைச் சிக்கிரத்திலேயே இழந்தான். அத்திம்பேர்தான் அரும் பாடுபட்டு எங்களை வளர்த்தார். சிறு வயதிலிருந்து இப்படி ஒன்றாக வளர்ந்த எங்களைப் பிரித்தது என்னுடைய மணநிகழ்ச்சிதான்.

அவர் எது சொன்னாலும் அதில் உண்மையிருக்கும். ஆனால் அத்தானை நான் நன்றாக அறியவில்லை என்று சொன்னது தான் எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. அத்தான் அறைக்குள் சென்றேன். என்னையும் அறியாமல் கண்களில் நீர் துளித்தது. நல்ல வேளை, அத்தான் தூங்குகிறான். அலட்டாமல் இரண்டு மணி நேரம் தூங்கினானென்பதே கிடையாது - இந்த நோய் வந்ததிலிருந்து. இப்பொழுதாவது தூங்குகிறானே என்று என் மனம் சந்தோஷப்பட்டது. ஓசைப்படாமல் வெளியே வந்தேன்.

அவர் சொன்னது சரிதான். அவனை நாம் வரவழைத்தது தவறுதான் என்று என் மனம் எண்ணியது. ஆனால் அந்தக் கடிதம்! அதைப் பார்க்கக் கல் நெஞ்சம் கரையுமே! பழைய கடிதக் கட்டுகளிலிருந்து அதை எடுத்தேன். முதலிலிருந்து கடைசி வரை ஒரு தடவை படித்தேன். அதில் கீழ்க் கண்டவாறு எழுதியிருந்தது:

"சௌ. சாவித்திரிக்கு அநேக ஆசிர்வாதம். இவ்வளவு நாளாகச் சும்மா இருந்துவிட்டு இன்று ஏன் கடிதம் எழுதுகிறேன் என்று உனக்கு ஆச்சர்யமாக இருக்கலாம். அதற்குக் காரணம் எனக்கு இப்பொழுது சொல்லத் தெரியவில்லை. சிறு குழந்தையிலிருந்தே ஒன்றாக வளர்ந்தோம், ஒன்றாக விளையாடினோம்; ஒன்றாகப் படித்தோம். வாழ்நாட்கள் முழுவதும் இப்படியே இன்பகரமாகக் கழியு மென்றெண்ணினேன். நீயும் மணமாகிக் கணவனுடன் சென்றாய். அப்பாவும் சென்று விட்டார். நான் தான் தன்னந் தனியாக நிற்கிறேன். நல்ல வேளையாய் இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை.

"பணமிருக்கிறதே, சந்தோஷத்திற்கு என்ன குறைச்சல் என்று பார்ப்பவர்கள் சொல்லலாம். சொற்ப வருவாய் உள்ளவர்கள் மகிழ்ச்சியுடன் காலம் தள்ளுவதை நாம் காணவில்லையா? பணக்காரர்களுக்குத்தான் தனி உரிமை பெற்றதா சந்தோஷம் என்பது?

"சில வருஷங்களுக்கு முன் அய்யனூரில் ஒரு ரயில் விபத்தேற்பட்டதே, ஞாபகம் இருக்கிறதா? அதே தினம் என் நண்பர் ஒருவர் அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். ஏதோ தெய்வானுகூலமாக அவர் காயங்களின்றித் தப்பினார். படித்து விட்டு அவர் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சமயம் அது. அப்பொழுது அவர் சொன்னார். 'ஐயோ! நானும் எஞ்சினுக்கு அடுத்த வண்டியில் வந்திருக்கக் கூடாதா? எல்லாம் ஒரே முழுக்காக முடிந்து விட்டிருக்குமே!' என்று. இது எனக்கு இப்பொழுது அடிக்கடி ஞாபகம் வருகிறது.

"நாட்கள் பறக்கின்றன. ஆனால் என் மனதில் நிம்மதி என்பதே கிடையாது. புயலிலகப்பட்ட படகுபோல் அலைகிறேன். ஆனாலும் இந்த வாழ்க்கைப் பெருங் கடலை நீந்திக் கரை சேர்வது நம்முடைய பிரயாசையிலும் இருக்கிறதல்லவா?

"இதனால் தான் நான் டில்லிக்கு வரலாமா என்று எண்ணுகிறேன். அங்கு ஏதாவது வேலை கிடைத்து, அதில் மனதைச் செலுத்தினால் ஒரு வேளை மனச்சாந்தி கிடைக்கலாமல்லவா? 'அவ்வளவு தொலைவில் ஏன் போகிறாய்?' என்று பரிவு கலந்த குரலில் கேட்பதற்குத் தந்தையும் தாயுமோ இல்லை. அதனால் உன் கணவரிடம் சொல்லி எனக்கு அங்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்ய முடியுமானால் நான் வாழ்நாள் பூராவும் நன்றியுள்ளவனா யிருப்பேன். கருணை செய். மறக்காதே.

"என்னுடைய துன்பங்களையே உன்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன், இல்லையா? உன் பெண்மனத்திற்கு எப்படித் தோன்றுகிறதோ, எனக்குத் தெரியாது. மனதைத் திறந்து கொட்ட எனக்கு உன்னைத் தவிர வேறு

யார் இருக்கிறார்கள்? ஒருவேளை நீ சிரிக்கலாம். இப்பவும் ஒரு அத்தான் இருப்பானா என்று. ஆனால் நான் என்ன செய்யட்டும்? இதை தான் இன்று என் மனத்தில் மிதப்பவை. உளறிக் கொட்டியிருக்கிறேன். உடனே பதில் போடு.

இப்படிக்கு
உன் அத்தான்.''

இந்தக் கடிதத்திற்கு நான் என்ன பதில் எழுதினேன் என்று சொல்லத் தேவையில்லை.

* * *

அத்தான் வந்தான். நிகரில்லாத சந்தோஷத்தோடு நானும் என் கணவரும் அவனை வரவேற்றோம். அவன் வந்தது எனக்கு எல்லா விதத்திலும் உதவியாக இருந்தது. குழந்தை கண்ணன் மேல் அவனுக்கு அபார வாஞ்சை. குழந்தையால் எனக்குத் தொந்தரவு என்பதே கிடையாது. சதா அதோடு விளையாடிக் கொண்டு பொழுது போக்குவான். குழந்தையும் அவனோடு ஒட்டிக் கொண்டிருந்தது.

இப்படி எனக்குச் சகல விதத்திலும் உதவியாக இருந்து வந்தான். அவன் முகத்திலும் ஓர் ஒளி ஏற்பட்டது. முகத்தின் சோபை, வரும்போது இருந்ததைவிட மிகுந்து தோன்றிற்று. ''சரி, இப்பொழுது மனது சந்துஷ்டியோடிருக்கிறான். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு கல்யாணமுமாகிக் குடியும் குடித்தனமும் வைத்தால் அது அவனைப் புது மனிதனாக்கி விடும்'' என்று என் மனம் பூரித்தது.

ஆனால் என் ஆசையில் மண் விழுந்தது. அத்தானுக்கு விஷ ஜுரம் மாதிரி ஒன்று வந்து படுத்த படுக்கையானான்.

அத்தானுடைய அறைக்குள் சென்றேன். கண்ணை அகல விழித்து என் பக்கம் திரும்பினான். ''அத்தான்! எத்தனை நாள் நீ இப்படி காதல் விரதம் இருக்கப் போகிறாய்? இந்தா, வாயைத் திற. கொஞ்சம் ஆரஞ்சு ரஸத்தை விடுகிறேன்'' என்றேன்.

''இன்னும் இரண்டு நாள்தான் சாவித்திரி! அதற்கப்புறம் இந்த வாழ்வில் கிடைக்கப் பெறாத ஒரு பொருள்—சாந்தி—கிடைத்து விடும். அதற்கப்புறம் உனக்கு இராத் தூக்கம் விழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது.''

''அத்தான், நான் எத்தனை நாள் வேண்டுமானாலும் இராத் தூக்கம் விழிக்கத் தயார். நீ மட்டும் பிழைத்துவிடு. அது போதும்'' என்று சொல்லிக் கொண்டே அவன் நெற்றியை என் கையால் நீவிக்கொண்டே அவன் வாயில் கொஞ்சம் ஆரஞ்சு ரஸத்தை விட்டேன்.

''அப்படியே நெற்றியில் கையை வைத்துக் கொண்டிரு. இதமாயிருக்கிறது'' என்றான் அவன்.

அவனுக்கு இந்தச் சமயத்தில் உற்சாக மூட்டினால்தான் நல்லது என்று எனக்குத் தோன்றிற்று. ''டாக்டர் என்ன சொன்னார் தெரியுமா, அத்தான்? இரண்டு நாள் ஜாக்கிரதையாக இருந்தால் உனக்குக் குணமாகி விடுமாம்.''

''என்ன, சாவித்திரி, குழந்தையா என்ன, என்னுடைய நிலைமை எனக்குத் தெரியாமல் போவதற்கு. அந்தத் தெளிவும் பிரகாசமும் என்ன என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? விளக்கு அணையும்போது எவ்வளவு ஜீவசக்தியுடன் பிரகாசமாக எரிகிறது என்று உனக்குத் தெரியுமா? அதே தான்......''

''போதும், அத்தான்! நிறுத்து. மறுபடியும் அலட்ட ஆரம்பித்து விட்டாய். நிம்மதியாக இரண்டு மணி நேரம்தான் தூங்கேன். களைப்பாற வேண்டாமா; என் உடம்பை அலட்டிக் கொள்கிறாய். மனதிலும் சமாதானமில்லாமலிருக்கிறாய். ஏன், எங்களைக் கண்டால் பிடிக்கவில்லையா?''

''பிடிக்காமலென்ன, எல்லோரையும் பிடிக்கிறது. எனக்கு இந்த உலகத்தில் பிடிக்காதவர் ஒருத்தரே ஒருத்தர்தான். அது நானே தான்.''

''அத்தான், அப்பொழுதே நீ ஒரு நல்ல பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தாயானால் இவ்வளவிற்கு வந்திராது. கல்யாணம் என்பது வாழ்க்கையில் ஒரு பொறுப்பையும் சிரத்தையையும் தேடித் தருகிறது. அது உன்னை வேறு பாதையில் திருப்பிவிட்டிருக்கும்'' என்று பேச்சை வேறு பக்கமாகத் திருப்பினேன்.

''அதைப் பற்றி நினைத்துப் பயனில்லை. அந்தச் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறி விட்டேன். என் மனத்திலும் ஒரு பெண் கோயில் கொண்டாள். அவளோடு காதல் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று நான் ஒரு காலத்தில் மனப்பால் குடித்ததுண்டு. ஆனால் அது இப்பொழுது நடக்காத காரியம்.''

''ஏன், நீ எண்ணிய போதே பண்ணிக் கொண்டிருக்க வேண்டியதுதானே? ஏன் நழுவ விட்டாய், அத்தான்?''

''நான் எண்ணினேன் என்பது உண்மைதான். ஆனால் பெண்ணின் மனத்தை அறிய

நான் முயற்சி யெடுக்கவில்லை. அவளை நான் மணம் செய்து கொண்டிருந்தேனானால் நானும் ஒரு வேளை நாலு பேரைப் போல் நல்ல நிலைமைக்கு வந்திருப்பேனோ என்னவோ? என் ஆவல் பூர்த்தியாவதற்கு சந்தர்ப்பமே ஏற்படவில்லை. அதற்குள் அவளுக்கும் கல்யாண மாகிவிட்டது."

"அந்தப் பெண்ணுக்கு மனப்பாங்கு தெரிய வில்லையானால், நீயாவது அவளிடம் உன் அந்தரங்கத்தைச் சொல்லி யிருக்கலாகாதா?"

"சொல்லி யிருக்கலாம். உண்மைதான். ஆனால், அப்பொழுது எனக்குத் தைரியம் வரவில்லை......சரி, இப்பொழுது அதைப் பற்றி எண்ணி என்ன செய்கிறது?"

"ஆமாம், அத்தான்! அவ்வளவு மனக் கஷ்டத்தைக் கொடுத்த அந்தப் பெண் தான் யார், அவளை எனக்குத் தெரியுமா?"

"அவளா, யார் என்று சொல்லட்டுமா?"

அத்தான் திகைத்தான். மலர விழித்து என்னைப் பார்த்தான். அவன் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. "யார் தெரியுமா...... சாவித்திரி.......சொல்லட்டுமா.... நீதான்!"

எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. முகம் வியர்த்தது. "உண்மை அப்படியா, அத்தான்?" என்று கேட்டேன்.

அதற்குள் அத்தான் இடை மறித்து: "சாவித்திரி! என் மனத்தில் இவ்வளவு நாள் நான் அடக்கி வைத்திருந்தது இது தான். இதைத் தவிர மற்றதை யெல்லாம் உன்னிடம் சொல்லி யிருக்கிறேன். இப்பொழுது பாரம் இறங்கினது போலிருக்கிறது. இனிமேல் சாந்தியோடு சாகத் தயார். உன்னிடம் என் உள்ளத்தைத் திறந்து சொன்னதற்காக என்னை மன்னிப்பாயா?" என்றான்.

"என்னால் ஒன்றும் சொல்ல முடிய வில்லை, அத்தான்! எதற்காக மன்னிப்பு?"

அத்தான் தொடர்ந்து கூறினான்:

"நீயும் உன் கணவரும் ஒத்த அன்போடு பாங்காகக் குடித்தனம் செய்கிறீர்களென்று என் காதில் விழுந்தபோது என் மனம் எவ்வளவு சந்தோஷமடைந்தது தெரியுமா? குழந்தை கண்ணன் எங்கே? அவன் சந்தோஷத்தைக் காட்டிலும் பதின்மடங்கு சந்தோஷம் அடைந்திருக்கிறது என் மனம். நிம்மதியாகச் சாகத் தயார்" என்றான் வெறியோடு.

அன்று இரவு அத்தானுடைய உயிர் இம் மண்ணுலகை நீத்துச் சென்றது.

யாரோ இவர் யாரோ?



"இவர்கள் எந்த தேசத்து ராஜாக்களோ? தங்களுக்குத் தெரியுமா?"

"ஒரு தேசத்து ராஜாக்களும் இல்லை; டிராமாக் கம்பெனி ராஜாக்கள்! இந்தத் துணிப் பஞ்சத்தில் வேறு உடை யில்லாததால் டிராமாவில் அணியும் ராஜ பார்ட்டு உடையையே தரித்துக் கொண்டு போகிறார்கள்!"

வட்டமேஜை

பாக்ஷுக்குட்டம்,
ஜோலாரப்பேட்டை போஸ்ட்
27—6—46

கல்கி ஆசிரியர் அவர்களுக்கு,

எங்கள் தாலுக்காவில் கிராம உணவுக் கமிட்டிகள் தாசில்தாரால் அமைக்கப்பட்டுள்ளன. 26-6-46ந் தேதி காலை சில இடங்களில் ஏதோ புரியாத முறையில், தண்டோரா மூலம் தெரிவித்தும், சில இடங்களில் அடியோடு தெரியாமலேயும், தாசில்தார் தனது ஆபீஸில் உட்கார்ந்து கொண்டு சுமார் 120 மைல் விஸ்தீரணமுடைய, 100க்கு மேற்பட்ட கிராமங்கள் கொண்ட ஒரு பிர்க்காவை மாலை இரண்டு மணிக்கு ஆரம்பித்து ஐந்து மணிக்குள் கமிட்டிகள் அமைக்கும் வேலையை கிராம மணியக்காரர்கள் கொடுத்த ஜாபிதாவைக் கொண்டே அமைத்துள்ளார். பொதுஜனங்களுக்கு விஷயம் அடியோடு தெரியாததால் பொது ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளைக் கமிட்டிகளில் அமைக்க இயலாமற் போயிற்று. மேற்கொண்டு இத்தகைய முறையில் கமிட்டிகள் அமைத்தல் சரியல்லவென்றும், பொதுஜனங்களுக்கு முன்னதாக அறிவித்து அவர்களது நியாயமான பிரதிநிதிகள் கொண்ட கமிட்டிகள் அமைக்க வேண்டுமென்றும் ஆகையால் கமிட்டிகள் அமைக்கும் தேதியைத் தள்ளி வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் எங்கள் தாலுக்கா எம். எல். ஏ., பொன்னுசாமி கவுண்டர் சொன்னார். ஆனால் அதை நிராகரித்து அவர் இல்லாமலேயே கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தாலுக்கா காங்கிரஸ் கமிட்டிக்காரர்களாகிய நாங்கள் இதை வெள்ளம் விளக்கி 21-6-46ந் தேதி இரவு பத்து மணிக்கு பிரதம மந்திரி யவர்களுக்கு டெலிபோன் மூலம் செய்தி யறிவித்தோம். அவர் தூங்கிக் கொண்டிருந்ததால் அவரது காரியதரிசி டி. ஹனுமந்தராவுக்கு சமாசாரங்களை விரிவாகச் சொன்னோம். அதோடு அன்றே தந்தியும், தபாலும் அனுப்பினோம். நாளது வரை அவரிடமிருந்து எவ்வித பதிலும் இல்லை. காங்கிரஸ் அரசாங்கத்திலே, உணவுக்குத் திண்டாடும் இந்த நேரத்திலே, திட்டங்கள் இவ்வளவு கேவலமான முறையில் அமுல் நடத்தப்படுகின்றன. தாங்கள் எங்கள் நிலையை விளக்கியும் மேற்கொண்டு மற்ற தாலுக்காக்களிலும் இத்தகைய முறை கையாளப்படாமலும் தடுக்கத் தகுந்தவாறு தங்கள் பத்திரிகையில் விரிவாகப் பிரசுரிக்கக் கோருகிறேன்.

பா. வேணுகோபாலன்,
காரியதரிசி,

திருப்பத்தூர்
தாலுக்கா காங்கிரஸ் கமிட்டி.

[தங்கள் விருப்பத்தின்படி கடிதத்தை விரிவாகப் பிரசுரித்து விட்டோம். தூங்கிக் கொண்டிருப்பவர்களை ஒருவாறு எழுப்பி விடலாம், விழித்துக் கொண்டிருப்பவர்களைத்தான் எழுப்ப முடியாது என்பதை ஞாபகப்படுத்துகிறோம். இந்தக் கடிதத்தையே நம்பி யிருந்து விடாமல், தங்கள் தாலுக்கா எம். எல். ஏ. யைக் கொண்டு மேலும் பிரயத்தனம் செய்யக் கோருகிறோம்.
—ஆசிரியர்]

அவனுடைய கேள்வி!

ஒருநாள் பட்டிக்காட்டான் ஒருவன் ஒரு பாங்கிக்குச் சென்று ஐந்நூறு ரூபாய் கடன் கேட்டான்.

பாங்கி மானேஜர் அவனைப் பார்த்து, "உனக்கு ஐந்நூறு ரூபாய் தருகிறேன். ஆனால், அதற்கு ஜாமீனாக நீ என்ன வைத்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

"என்னிடம் பத்து எருமை மாடுகள் இருக்கின்றன" என்றான் அந்தப் பட்டிக்காட்டான்.

பாங்கி மானேஜர் அவனுடைய எருமைகளை ஜாமீனாக வைத்து அவனுக்கு ஐந்நூறு ரூபாய் கடன் கொடுத்தார்.

ஐந்தாறு மாதங்களுக்குப் பிறகு அந்தப் பட்டிக்காட்டான் திரும்பி வந்தான். ஓர் ஆயிர ரூபாய் நோட்டை மானேஜரிடம் கொடுத்து, கடனைக் கழித்துக்கொண்டு பாக்கியைக் கொடுக்கச் சொன்னான்.

மானேஜர் அவனைப் பார்த்து, "பாக்கிப் பணம் வேண்டுமானால் இங்கேயே இருக்கட்டுமே; பாங்கியில் போட்டு வைக்கிறதுதானே!" என்றார்.

பாங்கி மானேஜரைப் பட்டிக்காட்டான் ஏற இறங்கப் பார்த்தான்.



"சரி, போட்டு வைக்கிறேன். ஆனால் உம்மிடம் ஜாமீனுக்கு எத்தனை எருமைகள் இருக்கின்றன?" என்றான்.

யோசனை பலித்தது!

பகீரதன்

அன்று சமையலில் கவனமே ஓடவில்லை அஞ்சுகத்திற்கு. அவள் கண், மனம் எல்லாம் அடுத்த வீட்டு ஜன்னலை ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்தன. 'கலீர்' என்று சிரிக்கும் சத்தம் கேட்கவே, ஊன்றிக் கவனிக்க ஆரம்பித்தாள் அஞ்சுகம். கையில் மலர்ந்த மல்லிகைப் பூங்கொத்துடன் தன் அருமை மனைவியின் அருகில் நிற்கிறான் அந்த வாலிபன். அவள் நாணிக் கோணிக் கொண்டு "என்னிடமே கொடுத்துவிடுங்கள்; நானே தலையில் வைத்துக் கொள்கிறேன்" என்று அன்போடு கேட்கிறாள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டே இருந்த அஞ்சுகத்திற்குக் குபீரென்று உடம்பு முழுவதும் வியர்க்க ஆரம்பித்து விட்டது. "நாமும்தான் குடித்தனம் செய்கிறோமே, சமையல்காரியைப் போல! அந்த இளந் தம்பதிகள் எவ்வளவு குதூகலமாக இருக்கிறார்கள்! என்ன ஆனந்தமாக வாழ்க்கையை நடத்துகிறார்கள்!" என்று மனம் கலங்கினாள்.

அப்பொழுது, "ஸார்! தபால்!" என்ற சத்தம் கேட்கவே துள்ளிக் குதித்து ஓடிப் போய்க் கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள். அது அவள் தகப்பனாரிடமிருந்து வந்திருந்தது.

இந்தச் சமயத்தில், "ஆபீஸுக்கு நாழிகை யாகி விட்டது; இலையைப் போடு!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான் அஞ்சுகத்தின் கணவன் ரங்கராஜன்.

அடுப்பில் கத்திரிக்காயை வேக வைத்து விட்டு வந்தது அப்பொழுதுதான் அவளுக்கு நினைவு வந்தது. கடிதத்தைக் கீழே போட்டு விட்டு உள்ளே ஓடினாள். கத்திரிக்காய் எல்லாம் காய்ந்து கருகிப் போய்க் கிடந்தது. அதைப் பார்த்ததும் சிலைபோல் செயலற்று நின்று விட்டாள் அஞ்சுகம்.

இந்தக் காட்சியைக் கண்ட ரங்கராஜனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. "இன்று சாப்பாட்டுவாயில் மண்தான். அம்மாள் அடுப்பைக் கவனிக்காமல் கடிதத்தில் மூழ்கியிருந்தாளாக்கும்!—வெட்கமில்லாமல் 'நாலு மாதமாக நான் முழுகாமல் இருக்கிறேன், நல்ல நாள் பார்த்துக் கொண்டு வந்து என்னை அழைத்துப் போ!' என்று உன் தகப்பனுக்குக் கடிதம் எழுதி விட்டாயோ? ரொம்ப நல்லது. பேஷாகப் போய்ச் சேரு. இன்று நீயே உன் கருகிப்போன சமையலைச் சாப்பிடு!" என்று எரிந்து விழுந்து விட்டு விர்ரென்று வெளியே சென்றுவிட்டான் ரங்கராஜன்.

அஞ்சுகத்திற்கு அகில லோகமும் சுழலுவதுபோல இருந்தது. அடுத்த வீட்டு இளந் தம்பதிகளோடு, தன்னுடைய வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்து, அவள் என்னவெல்லாமோ எண்ணி எண்ணி ஏங்கினாள். அன்று மாலை பால்காரன் வந்து கூப்பிட்டபோதுதான் அவளுக்குச் சுய உணர்வு வந்தது. தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்திருந்தாள். "ஐயோ! இவ்வளவு நேரமாகி விட்டதே! காலையில் அவர் சாப்பிடாமல் ஆபீஸுக்குப் போனாரே! மாலை அவருக்கு ஏதாவது 'டிபன்' செய்ய வேண்டாமா?" என்று எண்ணிக்கொண்டே அடுப்பை மூட்டச் சென்றாள்.

அந்தச் சமயத்தில் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, "நான் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வந்து விட்டேன்; எனக்காக ஒன்றும் செய்ய வேண்டாம்!" என்று சொல்லிக் கொண்டே அடுப்பங் கரைக்கு வந்தான் ரங்கராஜன்.

இதைக் கேட்ட அஞ்சுகத்திற்குச் 'சுரீர்' என்றது. கண்ணீரும் கம்பலையுமாய் கணவனின் அருகில் சென்றாள்.

"இந்த நீலிக் கண்ணீருக்கு நான் வசிய மாவேன் என்று நினைக்காதே!" என்று சொல்லிவிட்டு ரங்கராஜன் கூடத்திலிருந்த ஈஸிசேரில் சாய்ந்தான்.

"உலகத்திலே யாரும் செய்யாத தவறை நான் என்ன செய்து விட்டேன்?" என்று நினைத்துப் பார்க்கும்போது அஞ்சுகத்தால் தாங்கவே முடியவில்லை.

இப்படியே ஒரு வாரம் சென்றது. ரங்கராஜன் அஞ்சுகத்தினிடம் பேசுவதே கிடையாது. ஹோட்டலில்தான் சாப்பாடு. வீட்டிற்கு வருவதும், ஆபீஸுக்குப் போவதும் வெளித் திண்ணையில் படுத்து உறங்குவதுமாக நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் "வாருங்கள், வாருங்கள்!" என்று தன் கணவன் யாரையோ அழைத்த சத்தம் கேட்டு வாசலுக்கு வந்தாள் அஞ்சகம். தன் தகப்பனார் வந்திருப்பதைப் பார்த்ததும் அவளுக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. அப்படியே ஓடிப் போய் அப்பாவைப் பிடித்துக் கொண்டு 'ஹோ'! என்று அழலாமா என்று கூடத் தோன்றியது. ஆனாலும் மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு சாந்தமாக நின்று கொண்டிருந்தாள்.

"என்ன, சௌக்கியமா? அஞ்சகம் சௌக்கியமாயிருக்கிறாளா?" என்று மாப்பிள்ளையை விசாரித்துக் கொண்டே திண்ணையில் உட்கார்ந்தார் மாமனார்.


அஞ்சகம் உள்ளே இருந்தபடியே தன் தந்தையை ஆவலுடன் பார்த்தாள். "இந்தா, அம்மா! இதை யெல்லாம் உன் அம்மா உன்னிடம் கொடுக்கச் சொன்னாள்!" என்று சொல்லி ஒரு பையை அஞ்சகத்தின் கையில் கொடுத்தார்.

"என்ன மாப்பிள்ளை! இன்று நல்ல நாள். சாயங்கால ரயிலுக்கு அஞ்சகத்தை அழைத்துக் கொண்டு போகலாம் என்று இருக்கிறேன். உங்களுக்குத்தான் கொஞ்சம் கஷ்டமா யிருக்கும்......"

"அதனாலென்ன, பாதகமில்லை. நான் ஆபீஸிலிருந்து சாயங்காலம் சீக்கிரம் வந்து விடுகிறேன். அஞ்சகத்தை ஊருக்குப் புறப்படுவதற்குத் தயாராய் இருக்கச் சொல்லுங்கள்!" என்று சொல்லி விட்டு ஆபீஸுக்குச் சென்று விட்டான் ரங்கராஜன்.

மாலையில் ஒரு வண்டியை அழைத்துக் கொண்டு வந்து மனைவியையும் மாமனாரையும் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போய் ரயிலேற்றி விட்டு வந்ததற் கப்புறம்தான் ரங்கராஜனுக்கு நிம்மதி உண்டாயிற்று.

அஞ்சகம் தன் பிறந்தகத்திற்குச் சென்று மூன்று மாதங்களாகி விட்டன. ஒரு நாள் "ஸார்! தந்தி!" என்று சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு வாசலுக்கு ஓடினான் ரங்கராஜன். கைகள் நடுநடுங்கக் கையெழுத் திட்டுத் தந்தியை வாங்கிப் படித்துப் பார்த்தான். "அஞ்சகத்திற்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது; தாயும் குழந்தையும் சௌக்கியம்" என்று இருந்தது.



ரங்கராஜனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவனுக்கு உடனே போய்த் தன் குழந்தையைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ஆனாலும் நடுவில் "நாமே வலுவில் போகக் கூடாது!" என்ற வைராக்கியம் வந்து அவன் மனதைக் கல்லாக்கி விட்டது.

இப்படியாகத் தினங்கள் வாரங்கள் மாதங்களாக ஒரு வருஷம் ஓடி மறைந்தது.

தன்னைக் கொண்டுபோய்த் தன் கணவனிடம் விட்டு விடும்படி அஞ்சகம் தன் தந்தையிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள். "உன்னை விரும்பாத உன் புருஷனிடம் உன்னைக் கொண்டுபோய் நான் விட மாட்டேன்!" என்று கண்டிப்பாய் மறுத்து விட்டார் அஞ்சகத்தின் தந்தை.

வேறு வழியின்றி அஞ்சகம் தன் விதியை நொந்து கொண்டாள்.

ரங்கராஜன் அன்று வழக்கம்போல் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். வெந்ததும் வேகாததுமாயிருந்த சப்பாத்தியைக் கொண்டு வந்து வைத்து விட்டு, ஒரு கட்டி பட்டை அடித்த சாதத்தை இலையில் போட்டுவிட்டுப் போன சப்ளையர் திரும்பி வரவே இல்லை. ஒரு மணி நேரமாகக் காத்துக் கொண்டிருந்த பிறகு, "சாம்பார் கிடையாது; ரஸமும் மோரும் தான்!" என்று சொல்லிக் கொண்டே உப்பில்லாத ரஸத்தையும் கொஞ்சம் நீர்

நல்ல யோசனை!



தகப்பனார் கரடி:—என்ன ஸார், இந்தப் பையனைக் காலேஜில் சேர்க்கணும் என்று பார்க்கிறேன். ஒரு காலேஜிலாவது இடம் கிடைக்கவில்லை.

குரங்கு நண்பர்:—அப்படியா? பேசாமல் உயிர்க் காலேஜில் சேர்த்து விடுங்களேன்!

[சென்னை பீபிள்ஸ் பார்க்கில் உள்ள மிருகக் காட்சிச் சாலையை 'உயிர்க் காலேஜ்' என்று சொல்வது வழக்கம்.]

மோரையும் வைத்துவிட்டுப் போய்விட்டார் சப்ளையர்.

“என்ன, ஐயா! சாப்பாடு இவ்வளவு மோசமா யிருக்கிறதே!” என்று ஹோட்டல் முதலாளியிடம் போய்ப் புகார் செய்தான் ரங்கராஜன்.

காதிலும், கையிலும் வைரங்கள் மின்ன தொந்தியைத் தடவிக் கொண்டிருந்த முதலாளியின் காதில் இது உடனே விழுமா? சிறிது நேரம் கழித்து, “அப்படித்தான் இருக்கும் சாப்பாடு! உம்மை நாங்களா கூப்பிட்டோம்? இஷ்டமிருந்தால் சாப்பிடும்; இல்லாவிட்டால் போய்விடும்!” என்றார்.

அப்பொழுதுதான் தன் அருமை மனைவி அஞ்சுகத்தின் நினைவு அவனுக்கு வந்தது. “என்னதான் இருந்தாலும் வீட்டில் இவ்வளவு மோசமாகவா இருக்கும் சாப்பாடு!” என்று நினைத்துக் கொண்டான்.

மறுநாள், ஆபீஸில் நிறைய வேலை யிருந்தது. வயிற்றுப் பசி வேறு. வேலையை முடித்துவிட்டு வேகமாக ஹோட்டலுக்கு வந்தான். ஹோட்டல் வாசலில் நின்று கொண்டிருந்த காவற்காரன், 'என்னடா, ஒரு வருஷமாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறானே' என்று கூடப் பார்க்காமல் “மணி ஆகிவிட்டது; சாப்பாடு கிடையாது!” என்று கடுமையாகச் சொல்லியதுடன், ஹோட்டலுக்கு உள்ளே விடுவதற்குக் கண்டிப்பாக மறுத்து விட்டான்.

வேறு வழியில்லாமல் அன்று நாலு வாழைப் பழத்தை வாங்கிச் சாப்பிட்டு விட்டு ஆபீஸுக்குப் போனான் ரங்கராஜன். வயிறு நிறைந்தால்தானே வேலையைச் செவ்வையாகச் செய்ய முடியும்? ஒன்றிருக்க ஒன்றைச் செய்து விட்டு மானேஜரின் கோபத்துக்கு ஆளானான்.

அதே மன வேதனையில் சாயங்காலம் வீட்டிற்கு வந்தான். அன்றுதான் வீடு வெறிச்சென்றிருப்பது அவனுக்குத் தெரிந்தது. “அஞ்சுகமும் குழந்தையும் வீட்டில் இருந்தால்......” என்று எண்ணிப் பெருமூச்சு விட்டான்.

இந்தச் சமயத்தில் “என்ன, மிஸ்டர் ரங்கராஜன்!” என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். வீட்டுக்காரர் நின்று கொண்டிருந்தார்.

“உங்களிடம் ஒரு சேதி சொல்ல வேண்டும் என்று இரண்டு நாளாகப் பார்க்கிறேன். நீங்கள் அகப்படவே இல்லை. குழந்தை குட்டிகளை வைத்துக்கொண்டு வீடு கிடைக்காமல் எத்தனையோ பேர் கஷ்டப்படுகிறார்கள். திடீரென்று என் நண்பர் ஒருவர் இவ்வூருக்கு மாற்றலாகி வந்திருக்கிறார். வீட்டிற்கு ஒரு மாதமாக அவர் பார்க்காத இடமே கிடையாதாம். இந்தச் சமயத்தில் உதவி செய்ய வேணும் என்று என்னை ரொம்பவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறார். உங்களுக்கு மட்டும் இவ்வளவு பெரிய வீடு வேண்டியதில்லை. நீங்கள் ஒரு அறையை மட்டும் வேண்டுமானால் வைத்துக்கொண்டு, வீட்டைக் காலி செய்து கொடுத்து விடுங்கள்!”

இதைக் கேட்ட மாத்திரத்தில் ரங்கராஜனின் தலை சுழல ஆரம்பித்து விட்டது. அவன் மனம் எதிர்காலத்தை நோக்கி வேகமாக வேலை செய்ய ஆரம்பித்தது.

திடீரென்று ஏதோ முடிவுக்கு வந்தவனாய், “நாளைக்கு என் மனைவியையும் குழந்தையையும் போய் அழைத்துக்கொண்டு வரப் போகிறேன். தயவு செய்து வேறு யாருக்கும் வீட்டைக் கொடுக்க ஏற்பாடு செய்து விடாதீர்கள்!” என்று கேட்டுக் கொண்டான்.

“அப்படியானால் சரி!” என்று அவன் சொன்னதை ஆமோதித்து விட்டுச் சென்றார் வீட்டுக்காரர்.

* * *

ஆனால், தன்னுடைய மாமனார் எழுதிக் கேட்டுக் கொண்டதின் காரணமாகத்தான், அந்த வீட்டுக்காரர் தன்னை அவ்வாறு பயமுறுத்தினார் என்பது மிஸ்டர் ரங்கராஜனுக்கு எப்படித் தெரியும்?



"என்னென்"

ஒரு பெரிய வீட்டில் பல எலிகள் வெகு நாளாக வசித்து வந்தன. வீட்டுக்காரர் அவற்றைப் பிடிப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளாததால், எலிகள் தங்கள் மனம்போல் திரிந்து விளையாடிப் பண்டங்களைத் தின்று கொண்டிருந்தன.

ஒரு நாள் வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியூருக்குப் போய் விட்டனர். 'இது தான் சமயம்' என்று, வீட்டிலுள்ள எல்லா எலிகளும் கூடின.

"இப்பொழுது நம்மைத் தொந்தரவு செய்வதற்கு யாருமே இல்லை!...... இன்றிரவு நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு நாடகம் நடத்தினால் என்ன?" என்று ஓர் எலி கேட்டது.

மற்ற எலிகளும் "சரியான யோசனை!...அப்படியே நடத்தலாம்!" என்றன.

'என்ன நாடகம் போடுவது?' என்பதைப் பற்றிச் சிறிது நேரம் எல்லா எலிகளும் ஒன்று கூடிப் பேசிக்கொண்டிருந்தன. கடைசியில், 'எலி ராணியின் திருமணம்' என்ற நாடகத்தை நடிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு யார் யாருக்கு என்ன வேஷம் கொடுப்பது என்ற விஷயம் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு வேஷத்திற்கும் பலத்த போட்டி இருந்ததால், வாக்கு வாதம் பலமாக நடந்தது. கடைசியில் ஒவ்வொரு எலிக்கும் ஒரு வேஷம் கொடுக்கப் பட்டது.

ஒரே ஒரு குட்டி எலிக்கு மாத்திரம் ரொம்பக் கோபம். தனக்குக் கதா நாயகன் வேஷம் தரவில்லை என்ற காரணத்தால், அதற்கு நாடகத்தில் நடிக்கவே இஷ்டமில்லை. நாடகத்தை எப்படியாவது நடக்கவிடாமல் செய்து விட வேண்டுமென்று அது ஒரு யோசனை செய்தது.

ஒத்திகை மறுநாள் பகலில் நடந்தது. குட்டி எலி மாத்திரம் ஒன்றிலும் கலந்து கொள்ளவில்லை.

அன்றிரவு நாடகம் ஆரம்பமாயிற்று. எல்லா எலிகளும் நாடகத்திலேயே தங்கள் கவனத்தைச் செலுத்திய வண்ணம் இருந்தன.

நாடகம் நடந்து கொண்டிருக்கையில், திடீரென்று குட்டி எலி எழுந்திருந்து, "ஐயோ!...அதோ ஒரு பூனை வருகிறது!" என்று கத்தியது. அதைக் கேட்டவுடன் கண் மூடித் திறக்கும் நேரத்திற்குள் அங்கு கூடியிருந்த அவ்வளவு எலிகளும் மாயமாக மறைந்து விட்டன! குட்டி எலி மாத்திரம் நின்று கொண்டிருந்தது.

"ஏமாற்றி விட்டேனே! பூனையுமில்லை, ஒன்றுமில்லை! எனக்குக் கதா நாயகன் வேஷம் கொடுக்கா விட்டால், இப்படித்தான் நாடகத்தைக் கெடுப்பேன்! ... நான் செய்த யுக்தி பலித்து விட்டது!" என்று அது தனக்குத் தானே பெருமையுடன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, உண்மையாகவே அங்கே ஒரு பூனை வந்தது. குட்டி எலி பாவம், அதைக் கவனிக்கவே யில்லை.

"நீ ஒருவனாவது அகப்பட்டாயே!" என்று சொல்லிக் கொண்டே பூனை அதன் மேல் பாய்ந்து அதைப் பிடித்துக் கொண்டு போய் விட்டது!



ரேஷனும் அதிதியும்

எஸ். வி. எஸ்.

"நம்ம வீட்டுக்கு வரும் அதிதிகள் அதிகம் ஆக ஆக, ரேஷன்களும் அதிகமாகிக் கொண்டு வருகின்றன!" என்றார் ஒரு நண்பர்.

முதலில் அரிசி ரேஷன் வந்தது; பிறகு மண்ணெண்ணெய் ரேஷன்; அதற்குப் பிறகு கட்டை ரேஷன்; கடலைப் பருப்பு ரேஷன்!—என்று ஒவ்வொரு சாமானுக்கும் ரேஷன் வந்து கொண்டிருக்கிறது.

ஏன், ஒரு கப் காப்பி நல்லதாகச் சாப்பிடுவதற்கு வழியில்லாமல் சர்க்கரைக்குக்கூட ரேஷன் வருகிறது. அதற்குப் பூர்வாங்கமாக ரொம்பப்பேர் வீட்டில் வெல்லக் காப்பி குடிக்க ஆரம்பித்து விட்டார்கள்! வெல்லக் காப்பியின் ருசி, காப்பி குடிக்கும் நல்ல பழக்கத்திலிருந்து நம்மை விடுவித்து விடும் போலிருக்கிறது! பிறகு தென்னிந்தியன் தென்னிந்தியனாக இருக்க மாட்டான்!

இவ்விதமாக நம் தேவைக்கு வேண்டிய சாமான்களை ரேஷன் செய்யும் சர்க்கார் இந்த அதிதிகளையும் ரேஷன் செய்தால் தேவலை! ஆனால் அந்தக் காரியம் அவர்களால் முடியவில்லை; நாமேதான் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது!

"விருந்தாளிகள் யாராவது வருகிறார்கள் என்று தெரிந்தால் போதும் ஸார்; என் வீட்டுக் கதவை நன்றாக இழுத்துத் தாழ்ப்பாள் போட்டு, 'யில்லர்' லாக்கு, அதற்கு மேல் ஒரு 'ஸில்லர்' லாக்கு என்று இரண்டு மூன்று பூட்டு போட்டு விட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடப் போகிறேன்!" என்று நண்பர் பார்த்தசாரதி ஐயங்கார் அன்றொரு நாள் சொல்லிக் கொண்டிருந்தார்.

விருந்தாளிகள் வருகிறார்கள் என்றாலே இந்தப் பாடு; தப்பித் தவறி அவர்கள் 'தங்கி' விடுகிறார்கள் என்றால் மனசு படுகிற பாடு அந்த ஈசுவரனுக்குத்தான் தெரியும்!

அன்றைக்குப் பாருங்கள்: அந்தப் பார்த்தசாரதி ஐயங்கார் 'க்யூ'வில் நின்று கஷ்டப்பட்டு அரிசி வாங்கிக் கொண்டு தம் வீட்டு ரேழியில் நுழைந்தார். "நான் இங்கேயே தங்கி விட்டேன்!" என்று ஒரு குரல் வந்தது. மனுஷர் நடுங்கி விட்டார். யாரோ புது அதிதிகள் வந்து நம் வீட்டில் உட்கார்ந்து கொண்டு கழுத்தறுக்கிறார்கள் என்று எண்ணினார். கடைசியில் ஒன்றுமில்லை; குழந்தைகள் பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருந்தன. அதில் ஒரு குழந்தை 'தங்கி' விட்டது! அவ்வளவுதான்! அது இவ்வளவு பாடு படுத்தி விட்டது!

நாள் எல்லாம் வெயிலிலும் மழையிலும் ரிக்ஷா 'இஸ்த்து' (அவன் பாஷையில் சொல்லுகிறேன்) பிழைக்கும் கண்ணுசாமிக்கு எவ்வளவு கஷ்டம் என்கிறீர்கள்!

அவனுக்கும் எங்கிருந்தோ ஈசல்போல் வந்து விடுகிறார்கள் அதிதிகள்!

"முன்னே யெல்லாம் அரிசி கிடைக்கும்; கூலி கிடைக்காது. இப்போது கூலி நிறையக் கிடைத்தாலும் அரிசி கால் வயிற்றுக்குத்தானே 'ரேஷன்' என்று கொடுக்கிறாங்க! இதிலே வீட்டுக்குப் போனா நாலு விருந்தாளிங்க வந்து உட்கார்ந்திருப்பாங்க!" என்கிறான் கண்ணுசாமி!

திருவள்ளுவர் விருந்தோம்பல் செய்தால் இன்பம் ஏற்படும் என்கிறார்! இது அந்தக் காலத்துக்குச் சரியாக இருந்திருக்கலாம். இடைக்காலத்தில் தோன்றிய 'இன்னுவர்' "சில விருந்தாளிகள் வந்தால் இன்பம்; சில விருந்தாளிகள் போனால்தான் இன்பம்!" என்று கூறுகிறார். ரேஷன்கள் மிகுந்த இந்தக் காலத்திலோ, அதிதிகள் வராமலே இருந்தால் இன்பம்; வந்தவர்கள் போனால் ரொம்ப ரொம்ப இன்பம்.

ஆனால் இப்படியே நீண்ட காலம் ஒருவர் கூட நம்மை நாடி வராமல் நாட்கள் சென்று கொண்டிருந்தாலும் இன்பம் ரொம்ப அதிகமாகப் போய்த் திகட்டி விடும்!

ஆகவே, நேயர்கள் தங்களுடைய நண்பர்கள் வீட்டுக்கு எப்போதாவது ஒரு நாள் போய்ச் சற்றுச் சிரமப் படுத்தி விட்டு வருவார்களாக!

இதோ, நானும் இப்போதே என் நண்பன் ராமசுவாமி வீட்டுக்குப் போகிறேன்!

அடாடாடா! இது என்ன கூத்து! என்னைச் சிரமப் படுத்த ராமசுவாமியே வந்து விட்டானே! அட ராமச்சந்திரா!



குடும்பத்தில் அழகைப்பாதுகாத்தல்

"நீ பார்க்கிற படத்தைப் போலவே அவ்வளவு அழகாக இருந்தாள் என் தாய். ஆனால், அவள் சருமம் எவ்வளவு மிருதுவாயும் அழகாயு மிருந்த தென்பதைப் படம் காட்டமுடியாது" என்று தாய் கூறுகிறாள். தாய் தன் சருமத்தை அதிக ஆச்சரியகரமாகக் காப்பாற்றியிருக்கிறாள். தன் மகளும் அவ்வாறே செய்யவேண்டுமென்று விரும்புகிறாள். சுத்த நீல் பியர்ஸ் சோப்பை உபயோகித்து அழகைப் பாதுகாத்துக் கொள்ளும் ரகசியத்தை அவள் தன் மகளுக்குக் கற்பித்திருக்கிறாள். இந்த புத்திமதி அழகைத் தலைமுறை தத்துவமாக நிலைத்திருக்கச் செய்யும்.

நாற்பது ஆண்டுகளாக, இந்திய அழகிகளின் பிரிய சோப் பியர்ஸ்தான். அதன் மணமும், பட்டுபோன்ற மிருதுவான நுரையும் மற்ற சோப்புகளை விட உயர்ந்த ஸ்தானத்தில் அதை வைக்கின்றன.



பியர்ஸ் சோப்

அழகின் அடிகை

TU. 40-172 TM


A. & F. PEARS, ISLEWORTH, ENGLAND


ஸிரோலின்
'ரோச்'
இருமல் ஜலதோஷத்திற்கு
SIROLIN



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.


கல்கி
KALKI ஜூலை 7, 1946
4 அணா


சைபால்
CIBOL
சைபால்
for
RING
WORM
SOUTH INDIAN M
முகப்பரு, சேந்துப் புண், சிரங்கு, வேனல் கட்டி, தீப் பட்ட புண், கரப்பான் முதலிய வைகளுக்குக் கை கண்ட மருந்து
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை


குழந்தைகளுக்கு முக்கியமானது
பேபி கிரைப்
குழந்தைக்கு ஆரோக்கியமளிப்பது
குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும் போது ஏற்படும் வயிற்றுப்போக்கு, முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்
தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

Regd. No. M. 4392

